விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 236 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (11.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## அரியநேந்திரன் தொடர்பில் இன்று முடிவெடுக்கப்படும்
### மாவை சேனாதிராஜா

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரியநேந்திரன் தொடர்பில் இன்று முடிவெடுக்கப்படும் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் 19

## வடக்கு, கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை
## தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படத் தயார்
### சுமந்திரனுடனான சந்திப்பில் நாமல்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படத் தயார் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதி 19

## தேர்தல் தொடர்பில் 269 முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 269 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரி 19

# தேர்தல் முறைப்பாடுகளை பக்கச்சார்பின்றி விசாரிக்குக
## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

**தேர்தல் காலப்பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை பக்கச்சார்பின்றி விசாரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**



தேர்தல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

தேர்தல் காலப்பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பக்கச்சார்பானவையாகவோ அல்லது குறித்தவொரு தரப்பினருக்கு சாதகமானவையாகவோ அமையக் கூடாது.

பொலிஸாருக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் 19

திருக்கோணேஸ்வரத்தில்
## பல கோடி பெறுமதியான சோழர் கால தாலிக்கொடி திருட்டு
16ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் பயணிகள் கப்பல் சேவை
### 15ஆம் திகதி மீண்டும் ஆரம்பம்
### நேற்று வெள்ளோட்டப் பயணம்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்துக் கப்பலானது எதிர்வரும் 15ஆம் திகதி உத்தி 19

## நல்லூர் ஆலய வளாகத்தில் வீதித் தடையினை மீறி
### பௌத்த பிக்குகளின் வாகனங்கள்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய வளாகத்தில் வீதித் தடையினையும் மீறி பௌத்த பிக்குகளின் வாகனங்கள் உள் நுழைந்த சம்பவம் ஒன்று 19

தேர்தல் சின்னங்கள் தொடர்பில்
## விசேட வர்த்தமானி


(கொழும்பு)

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்தல் சின்னங்கள் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வாக்காளர்களால், வேட்பாளர்களை அடையாளம் காண்பதற்கும், வாக்களிப்பு செயற்பாட்டை இலகுபடுத்துவதற்கும் இவ்வாறான சின்னங்கள் 19

## அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களின் பலத்தைக் காட்ட இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும்
### பொது வேட்பாளர் தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு செய்தியைத் தெரிவிக்கும் நோக்கில், இம்முறை ஜனாதி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பண்ணை வேலைக்கு பணியாளர் தேவை

- ஆரம்பச் சம்பளம் 40,000/=
- இரு வேளை உணவு இலவசம்
- விடுமுறை உண்டு
- நிறுவனத்தின் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பவர்களாக இருத்தல் முக்கியம்

அழைக்க வேண்டிய நேரம் 3 PM to 6 PM

(240)

**0770 780 240**


## ஆட்டோவில் சடலம் மீட்பு

கொழும்பு, பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நாராஹென்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பம்பலப்பிட்டி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ம-7)


## விற்பனைக்கு...

01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 50 அடி அகலமும் 600 அடி நீளமும் கொண்ட மூன்று கடைகளும் அளவு 13 பரப்பும் 05 குழியும்
02. யாழ். பலாலி வீதியில் Campus சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 05 பரப்பில் அமைந்த மாடிவீடு
03. யாழ். பலாலி வீதி இலுப்பையடி சந்திக்கு அண்மையில் 5 1/2 பரப்புக் காணி
04. யாழ். பிறவுண் வீதியில் நீராவியடிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 07 பரப்புக்காணியும் 05 பரப்புக்காணியும்
05. யாழ்.மின்சாரநிலைய வீதியில் 1 1/2 பரப்புக் காணி
06. யாழ்.சிவன் கோவில் வடக்கு வீதியில் 03 கடைகளுடன் 05 பரப்புக்காணி
07. யாழ்.K.K.S வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் 05 பரப்புக்காணி
08. யாழ் .K.K.S வீதியில் மருதனார்மடச் சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 07 பரப்புக்காணி
09. யாழ். அச்சுவேலியில் 100 பரப்புக்காணியும் யாழ். அரியாலை பூம்புகார் வீதியில் 100 ஏக்கர் காணியும்
10. யாழ்.கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்.

உடன் விற்பனைக்குண்டு

(C-962)

**077 723 2535**

## விற்பனையாளர் தேவை (பெண்கள்)

எமது ஜவுளி நிறுவனத்திற்கு வியாபார அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.

**சென்னை பெசன் வேல்ட்**
இல.63, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(1682)

## மணமகள் தேவை

மாதம் 60,000/=, அரச D.O ஊழியர். B.Com, M.com மணமகனுக்கு (ரோகிணி,2ல் செவ்வாய்), 18 வயது - 30 வயதுக்குட்பட்ட O/L, A/L படித்த பெண் பிள்ளை இந்து கௌரவ குடும்பத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. சீதனம், நன்கொடை விரும்பியவாறு கொடுக்கக்கூடியவர்கள். உள்நாட்டில் எதிர்பார்க்கப்படுகின்றது. (1664)

**077 879 2697**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 14 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1671)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 29.06.2024 அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சிவராசா சகுந்தலாதேவி

அவர்களின் அந்தியேட்டி கிரியைகளும் சபிண்டீகரண நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை (29.07.2024) நடைபெற இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் அந் நிகழ்வுகள் பிற்போடப்பட்டது.

அந் நிகழ்வானது எதிர்வரும் திங்கட்கிழமை (12.08.2024) நாளை நடைபெறும் என்பதனை வரவழைக்கப்பட்டோர்க்கும் சம்பந்தப்பட்டவர்களிற்கும் அறியத் தருகின்றோம்.

சந்தையடி,
உடுப்பிட்டி. (C-964) குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு




கடந்த 07.07.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### வைத்திய கலாநிதி கந்தையா பாலசுப்பிரமணியம் (Dr. பாலா)

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 11.08.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.


வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியத்தின் மீது நீங்கள் கொண்ட பேரன்பினால் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு, இணுவில். (1678) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 03 - 1955



இறப்பு 10 - 08 - 2024

# தம்பிப்பிள்ளை வரதராஜா

(யாழ்.இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் கல்வி நிறுவன அதிபரும் ஓய்வுபெற்ற யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியரும்)

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் நேற்று (10.08.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எதிர்வரும் (13.08.2024) செவ்வாய்க்கிழமை மதியம் 2.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

405, பருத்தித்துறை வீதி,
இருபாலை.


தகவல் : குடும்பத்தினர்
077 970 7673, 074 362 0451

(1681)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ம் ஆண்டின் நினைவும், அஞ்சலியும்

## S.V.முருகேசு



"SVM" என்றால் அது
வர்த்தக உலகின் வைரவரிகள் என
வளர்த்தெடுத்த பெரியீர்!
தமிழினம் பெருமையுற
காரைநகர் "எம்மவர் இவர்" என கர்வமுற
யாழ்ப்பாணத்தின் "வர்த்தக சாம்ராட்"
அறம் வளர்த்த நாயகர், ஆன்மீக சிரோன்மணி என
அடுக்கடுக்காகி வரும் புகழுக்குரியீர்! நீங்கள்
விண்ணேகிப் பதினான்காண்டுகள்
விரைவாகிப் போனாலும், எம்மை
வழிப்படுத்தி, நெறிப்படுத்திய உங்கள்
ஆற்றலும் அன்பும் இனிய நினைவுகளும் எம்முள்ளத்தில்
என்றும் நீங்காமல் நிறைந்தும் நிலைத்தும் நிற்கும்!
இதயபூர்வமான எம் அஞ்சலிகளும் உங்கள்
இணையடிகளில் ஏந்தலே...!

– குடும்பத்தினர்

ஸ்தாபகர்

**S.V.Murugesu**
No.154, Hospital Road, Jaffna.

**S.V.Murugesu (Pvt) Ltd**
No.106, Hospital Road, Jaffna.

**S.V.M. Agencies (Pvt) Ltd**
No.154, Hospital Road, Jaffna.

**S.V.M. Distributors (Pvt) Ltd**
No.160, Standly Road, Jaffna.

**S.V.M. Stores (Pvt) Ltd**
No.162, Standly Road, Jaffna.

**S.V.M. (Pvt) Ltd**
No.122, Dam street, Colombo 12

**S.V.M. Enterprices (Pvt) Ltd**
No.289, A9 Road, Karadipokku, Killinochchi

**SVM. Fuel Mart**
No.173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna

**S.V.M. Rice Mill**
Power House Road, Chunnakam.

(1679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரனை சந்தித்தார் நாமல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வெற்றி பெற்றால் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் மாவட்டங்களின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பு கொழும்பு தயாவீதியில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார். (நி-6)



## கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம்

(முறிகண்டி)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

குறித்த ஆலயத்தில் முதல் முறையாக பாரம்பரிய முறையில் கொடிச்சீலை எடுத்து வரும் வைபவம் நேற்று நடைபெற்றது.

அந்த பாரம்பரியத்தினடிப்படையில் எருது பூட்டி கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்திற்கான கொடிச்சீலையை பிள்ளையார் கோவிலிலிருந்து எடுத்த வந்துள்ளோம். இந்த முறையானது வருடம் தோறும் இடம்பெறும். நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அடுத்ததாக இந்த ஆலயத்தில் முதல் முதலாக செய்துள்ளோம் என விழாவில் குருக்கள் தெரிவித்தார்.





விசேட பூசைகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து வருடாந்த மஹோற்சவ கொடி ஏற்றப்பட்டது. உற்சவத் திருவிழாக்கள் 10 நாட்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-100)

## மதுபானத்தின் விலையை 200 ரூபாயால் குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் மதுபானத்தின் விலையை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கலால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

750 மில்லி லீற்றர் மேலதிக மதுபான போத்தல் ஒன்றின் விலை 900 - 1000 ரூபாயினாலும் 175 மில்லி மீற்றர் போத்தலின் விலை 200 ரூபாயினாலும் குறைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, அண்மையில் கலால் ஆணையாளருக்கும் மதுபான நிறுவனங்களுக் கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. மதுவுக்கு அதிகம் பயன்படுத் தப்படும் ஸ்பிரிட்களின் விலை குறைந்துள்ளதாக கலால் ஆணையர் தெரிவித்துள்ளார். எனவே மது பானத்தின் விலையை குறைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இங்கு மதுபான போத்தல்களின் விலையில் 80% மற்றும் 90% VAT மற்றும் பிற வரிகளை உள்ளடக்கியதாக மது நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன. கடந்த ஜூலை 1. 2023 அன்று, அசாதாரண வர்த்தமானி அறிவித்தல்மூலம் மது பானங்களின் விலை அதிகரிக்கப்பட்டது விசேட மதுபான போத்தல் ஒன்றின் விலை 1000 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எதிர்காலத்தில் மது, பீர் ஆகியவற்றின் விலை கணிசமாகக் குறையும் என கலால் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப் ளோமா சான்றிதழ் நேற்று வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ரோட்டரி கழகத்தின் அனு சரணையுடன் ஆறுதல் அமைப்பினரால் பயிற்று விக்கப்பட்ட 337 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இதன் போது டிப்ளோமா சான்றி தழ்கள் வழங்கப்பட்டன.



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். (நி-33)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ் தானத்தின் இணை அனு சரணையுடன் நடத்தும் தெய் வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும்.

பிற்பகல் 6.45 மணி தொடக்கம் 7.10 மணி வரை இடம்பெறவுள்ள குழு இசையினை கீத வாகினி இசைக் கல்லூரி வழங்கவுள்ளது. இதில் வயலின் அ.கிருஸ்ணா லினி, மிருதங்கம் க.சிவகுமார்.

அதனைத் தொடர்ந்து பிற் பகல் 7.15 தொடக்கம் 8.05 வரை பக்தி இசை இடம்பெற வுள்ளது. இதில் பாட்டு-புவனா இரத்தினசிங்கம், உடன்பாடுபவர்-யதுர்சன் சிவா, வயலின்-ச.இந்தி ராணி, மிருதங்கம்-பொ.பால சுப்பிரமணியம், முகர்சிங்-ஜெ.சாரங்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

## பெயர் மாற்ற அறிவித்தல்

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் வசிக்கும் குமாரசாமி விஜயகுமார் என்னும் பெயரை இன்று முதல் புருசோத்மன் என பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் என்சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சன நாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

உண்மையுள்ள
குமாரசாமி புருசோத்மன் (6667)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை. (227)

இந்தியா தொடர்புகளுக்கு:
00919566156719

WESTERN UNION MoneyGram Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு
077 839 3974





## நல்லைக் கந்தவேளே!

மனைதோறும் வழிபாடு மனதாரப் புரிகின்ற
மாந்தர்கள் வாழுமண்ணில்
உனையன்றி வேறில்லை யுலகமே நீயென்று
உருவமே தோன்றுங்கண்ணில்
வினையாகும் வினையாவும் விரட்டவே
விழைந்தாலும்
விரைந்தெம்மைக் காக்கும் வேலே!
நினைக்கின்ற கணத்திலே நின்கருணை
நல்கின்ற
நேர்நல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்.

## அருள் புரிவாய் குமரா!

வள்ளி தெய்வானை சகிதம்
அழகோடு வீற்றிருந்து
அருள்பாலிக்கும் திருக்குமரா!
நின்பாதம் நாடி
நிற்கும் எமக்கு
அருள் மழை பொழிவாய்!

ராகவி

# இராசிபலன்

11.08.2024
ஆடி 26, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பின்னிரவு 4.57 மணிவரை

சுவாதி முழுவதும்
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி
சுந்தரர் குருபூசை

வளவன்

**மேஷம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** உடல் நலன் சீராகும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும் நாள், புதிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் கூடும், போசன சுகமுண்டு.

**கடகம்:** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நம்பிக்கைகள் நடைபெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வருமான பெருக்கத்திற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**சிம்மம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நினைத்தது நிறைவேறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** பணத்தேவைகள் திருப்தி தரும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உடல் நலன் சீராகும், வாக்கு மேன்மையுண்டு, உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.

**துலாம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முற்படுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** பொது வாழ்வில் புகழ் கூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ரோக பயமுண்டு.

**மீனம்:** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, வரவை விட செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


தவறான செயலுக்கு ஆலோசனை சொல்பவர்கள் துணையாய் வருவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 454
Viber 076 636 3378





# அதிகாரக் கதிரை யாருக்கு?













அரசியலில் தளம் அமைப்பதென்பது மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ள வேண்டிய ஒன்று. இது கத்தி மீது நடப்பதற்கு ஒப்பானது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். தவிர இது புலி வாலைப் பிடித்த கதை போலவே. ஒரு முறை அரசியல் சாயம் பூசப்பட்டு விட்டால் அதில் இருந்து மீள்வதென்பது இயலாத காரியம்.

இலங்கை வரலாற்றில் சிங்களத் தலைவர்களில் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் நிலைத்து நிற்கும். மகிந்த ராஜபக்ஷ தமக்கு விடிவைத் தந்த தலைவர். பயங்கரவாதத்தை நாட்டில் இல்லாதொழித்த வீரன் என சிங்கள மக்கள் போற்றி மகிழ்ந்தார்கள்.

2009 இறுதி யுத்தம் நிறைவு பெற்று பயங்கரவாதம் அளிக்கப்பட்டதாய் அறிவித்தல் வின் இராஜ்ஜியம் கொஞ்சம் கொஞ்சமாய் சரியத் தொடங்கியதே உண்மை.

கோட்டபாயவின் ஆட்சிக் காலத்தில் மக்களின் எழுச்சிப் போருக்கு முகம் கொடுக்க முடியாத ராஜபக்ஷக்கள் பதவி விலக நேரிட்டது.

நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் போது யாரும் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க துணிந்து ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார் என்ற விசுவாசம் ராஜபக்ஷக்களிடம் இருக்கவே செய்தது.

அதற்காக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனக் கட்சியில் ரணில் போட்டியிடுவார் என பலமாக நம்பியிருந்தது அக்கட்சி.

ஆயினும் அதற்கு இடம் கொடாத ரணில் விக்கிரமசிங்க தேர்தல் அறிவித்த அன்றே சுயேட்சையாக வேட்புமனுவைத் உடைத்தெறிந்து விட்டு உருவாக்கப்பட்டது பொதுஜன பெரமுன.

இக்கட்சி மிகப் பலம் பொருந்திய கட்சியாக திகழ்ந்ததுடன் அக்கட்சியின் மூளையாக பசில் ராஜபக்ஷ செயற்பட்டு வந்தமையும் முக்கியமானதாகக் கருதப்பட்டது.

அப்பேற்பட்ட பெரமுன கட்சிக்குள்ளேயே உடைவை ஏற்படுத்தியிருக்கிறது ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவுத் தளம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை உடைத்தது போல பெரமுன கட்சியை உடைப்பதற்கு பார்க்கிறார் ரணில் விக்கிரமசிங்க என பகிரங்கரமாகக் குற்றம் சாட்டினார் நாமல் ராஜபக்ஷ.

தாம் ஒரு நாளும் தேர்தலைக் கண்டு அஞ்சுபவர்கள் இல்லை. எத்தடை வந்தாலும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் என தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிலை நிறுத்தி இருக்கிறார் நாமல்

> **“ பேரம் பேசும் அரசியலில் கோட்டை விட்ட தமிழ் தலைவர்கள் தமது அரசியல் ஏலாப்பைக் காட்டிக் கொள்ள மனம் இன்றி பொது வேட்பாளர் என்ற புதிய யுத்தியை கையில் எடுத்து இருக்கிறார்கள்.**

விடுத்ததை தொடர்ந்து சிங்கள மக்கள் பேருந்துகளில் வடக்கு-கிழக்கை பார்வையிட ஆவல் கொண்டு ஓடி வந்தனர்.

அவர்கள் வருகை தந்த பேருந்துகளில் மகிந்தவையும் படையினரையும் போற்றும் வசனம் நிச்சயம் இடம்பெற்றிருக்கும்.

அந்தளவிற்கு அவர்களின் மனங்களில் மகிந்த ராஜபக்ஷ கதாநாயகனாகத் திகழ்ந்திருந்தார்.

என்ன செய்வது சிங்கள மக்களால் நாயகன் என்று கொண்டாடப்பட்ட தலைவரையே சிங்கள மக்கள் தூக்கி எறிந்தனர்.

ஆம், இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றுத்தர தவறினார் மகிந்தராஜபக்ஷ. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்பது போல சிங்கள மக்களே மகிந்த ராஜபக்ஷவிற்கு தோல்வியைப் பெற்றுக் கொடுத்தனர்.

அதன்பின் மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்து அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

அத்துடன் ராஜபக்ஷக்களின் கோட்டையாக விளங்கிய பெரமுன கட்சிக்குள் தனக்கு ஆதரவு தரக் கூடியவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை ராஜபக்ஷக்களுக்கு எதிராக பேச வைத்த பெருமை ரணில் விக்கிரமசிங்கவையே சாரும்.

அதில் அதி உச்சமாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்க வேண்டும் என்று, மகிந்த ராஜபக்ஷவின் வீட்டிற்குச் சென்று கடும் தொனியில் கோரிக்கை விட அது குறித்த உறுப்பினருக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் கை கலப்பு ஏற்படும் அளவிற்கு நிலை சென்றது.

நிலையை உணர்ந்த மகிந்த ராஜபக்ஷவின் மனைவி இருவரையும் சமரசம் செய்ததான செய்திகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷ.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை அறிவித்ததை தொடர்ந்து இது சஜித்திற்கான வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும் செயற்பாடு என அரசியல் தளத்தில் விமர்சனங்கள் எழத் தொடங்கியிருக்கின்றன.

நானே முதல்வன் எனக்கே மக்களின் துணை என்ற பெரும் நம்பிக்கையுடன் இருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை எப்படி மக்கள் ஏற்பார்கள். எமது ஆட்சி அனைத்து இன-மதத்தினரையும் நிம்மதியாக வாழ வைக்கும் ஆட்சியாக அமையும் என்கிறார் சஜித் பிரேமதாச.

எமது கை சுத்தமானது எமது கட்சியும் அப்படியே இருக்கும். ஊழலுக்கு எதிரான எமது ஆட்சியில் சுத்தமான கைகளை உடையவர்களே நிற்பார்கள் என்கிறார் அநுரகுமார திசாநாயக்க.

தெற்கில் இவ்வாறான களோபரங்கள் நடக்கும் நிலையில் வடக்கு-கிழக்கில் தமிழ் பொது வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பேரம் பேசும் அரசியலில் கோட்டை விட்ட தமிழ் தலைவர்கள் தமது அரசியல் ஏலாப்பைக் காட்டிக் கொள்ள மனம் இன்றி பொது வேட்பாளர் என்ற புதிய யுத்தியை கையில் எடுத்து இருக் கிறார்கள். இதுவரை நாம் ஆத ரித்த எவரும் எமக்கு எதையும் செய்யவில்லை.

இந்தத் தேர்தலில் நாம் தனித்து நிற்கின்றோம் என மார்தட்டி நிற்க இதுவரை ஜனாதிபதியாக இருக்காத ஒரு புதியவர் ஜனாதிபதியாக பதவியேற்கும் நிலை ஏற்பட்டால் தமிழினம் தனித்து விடப்படும் அபாயம் ஏற்படும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூளுமா உலகப்போர்?

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 10 மாதங்களாக நடந்துவரும் போர் தற்போது பன்னாட்டுப் போராக மாறும் அபாயத்தை எட்டியிருக்கிறது. உச்சகட்ட பதற்றத்திலிருக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நடப்பது என்ன?

**இஸ்ரேலுக்கு எதிராகப் பலமுனைத் தாக்குதல்?**

ஈரானில் வைத்து ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியேவைப் படுகொலை செய்தது இஸ்ரேல். இதற்கு நிச்சயம் பழிதீர்ப்போம்' எனச் சபதமெடுத்து இஸ்ரேலுக்கு எதிராகக் களமிறங்கியிருக்கிறது ஈரான். இந்தப் படுகொலையின் மூலம் ஈரானை மட்டுமல்லாமல், துருக்கி, பாகிஸ்தான், ஏமன் உள்ளிட்ட நாடுகளையும் கோபப்படுத்தியிருக்கிறது இஸ்ரேல். இதனால், ஏமனிலுள்ள ஹவுதி அமைப்பும் இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தத் தயாராகிக்கொண்டிருக்கிறது.

தங்கள் மண்ணில் தாக்குதல் நடத்தி, ஹிஸ்புல்லா அமைப்பின் படைத் தளபதி ஃபுவாத் ஷுக்ருவை இஸ்ரேல் ராணுவம் கொலைசெய்தது. லெபனானையும் சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது. இதனால், இஸ்ரேலுக்கு எதிராகப் பலமுனைத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவாக மத்திய கிழக்கு கடல் பகுதியில் தனது போர்க் கப்பல்களை நிலை நிறுத்தியிருக்கிறது அமெரிக்கா. ஆனால், போர்ப் பதற்றத்தைத் தவிர்க்கவே நாங்கள் போர்க் கப்பல்களையும், ஆயுதங்களையும் மத்திய கிழக்கில் குவித்துவருகிறோம் என்று சமாளிக்கிறது அமெரிக்கா.

**அவமானத்தில் ஈரான் புரட்சிகர காவற்படை!**

ஈரானின் புதிய அதிபர் மசூத்தின் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்ட ஹனியே, தலைநகர் டெஹ்ரானிலுள்ள விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தார். அந்தச் சமயத்தில், அமெரிக்காவின் உதவியுடன் ஹனியேவை இஸ்ரேல் கொலைசெய்திருப்பதாகக் குற்றம்சாட்டியிருக்கிறது ஈரான். முதலில் ஏவுகணைத் தாக்குதல் மூலம் ஹனியே கொல்லப்பட்டதாக சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. பிறகு, டெய்லி டெலிகிராஃப் ஊடகம் வெளியிட்ட செய்தியில், இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பைச் சேர்ந்த இருவர் விருந்தினர் மாளிகைக்குள் நுழைந்து மூன்று அறைகளில் வெடிமருந்துகளை வைத்துவிட்டு வெளியேறிய சிசிடிவி காட்சிகள் கிடைத்திருப்பதாக ஈரானிய அதிகாரிகள் கூறுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நியூயோர்க் டைம்ஸ் ஊடகமோ, இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே அங்கு வெடிமருந்துகள் வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்திருக்கிறது.

எது எப்படியோ இது ஈரானின் புரட்சிகர காவல் படைக்கு மிகப்பெரிய அவமானம் என்பது மட்டும் உண்மை. அதிபர் பதவியேற்பு விழா காரணமாகத் தலைநகர் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இருந்தும் அதேநாளில், ஈரான் மண்ணில் வைத்து ஹனியே கொலை செய்யப்பட்டிருப்பது அந்த நாட்டின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது' என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள். புரட்சிகர காவற்படை அதிகாரிகள் சிலரே இஸ்ரேலின் உளவு அமைப்புக்கு உதவியிருக்கலாம் என்ற சந்தேகமும் கிளம்பியிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக காவற்படையின் முக்கிய அதிகாரிகளும் விருந்தினர் மாளிகைப் பணியாளர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

**மத்திய கிழக்கில் பதற்றம்...**

'ஹனியேவின் கொலைக்காகத் தங்கள் நாட்டிலுள்ள இஸ்ரேலின் சொத்துகள்மீது ஈரான் தாக்குதல் நடத்தலாம்' எனப் புலனாய்வு அமைப்புகள் விடுத்த எச்சரிக்கையால், இஸ்ரேல் நாட்டின் முதலீடுகள் அதிகமுள்ள கிரீஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பைப் பலமடங்கு அதிகரித்திருக்கிறது அந்த நாடு. மறுபுறம், எந்தக் காரணமும் சொல்லாமல் இன்ஸ்டாகிராம் செயலியை திடீரெனத் தடைசெய்திருக்கிறது துருக்கி. இஸ்மாயில் ஹனியேவுக்கான இரங்கல் பதிவுகளை இன்ஸ்டாகிராம் நிறுவனம் நீக்கியதுதான் இந்தத் தடைக்குக் காரணம்' என்கின்றன துருக்கி ஊடகங்கள். மேலும், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலுள்ள தனது தூதரகத்தில், தங்கள் நாட்டுக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு ஹனியேவுக்கு அஞ்சலி செலுத்தியது துருக்கி. பயங்கரவாதி கொலைக்கு அரைக் கம்பத்தில் கொடியைப் பறக்கவிடுவதா?' என இஸ்ரேல் கொந்தளித்த நிலையில், துருக்கி, ஜோர்டான், பஹ்ரைன் நாடுகள் இஸ்ரேலுக்கான தங்கள் தூதர்களைச் சொந்த நாட்டுக்கு திரும்ப அழைத்திருக்கின்றன.

**திகதி குறித்த அமெரிக்கா...**

ஈரான், ஹிஸ்புல்லா, ஹவுதி அமைப்புகள் ஒன்றிணைந்து முதலில் தங்கள் நாட்டின் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள்மீது தாக்குதல் நடத்தலாம் என்று கணித்திருக்கிறது இஸ்ரேல். எனவே, தன் அமைச்சர்களுக்கு சாட்டிலைட் போன்களை வழங்கியிருக்கிறது இஸ்ரேல் அரசு. சில மேற்கத்தேய நாடுகளின் ஏஜென்சிகள், யூதர்களின் நோன்பு நாள்களான ஆகஸ்ட் 12, 13ஆம் திகதிகளில் ஈரான் தரப்பு தாக்குதல் நடத்தலாம் எனத் தெரிவித்திருக்கின்றன. ஆனால், அமெரிக்க வெளியுறவுத்துறையோ, ஓகஸ்ட் 5, 6 ஆம் திகதிகளிலேயே இஸ்ரேலை ஈரான் தாக்கலாம் என்றிருக்கிறது. இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, "எங்களைத் தற்காத்துக் கொள்ளவும் எதிர்த் தாக்குதல் நடத்தவும் தயாராக இருக்கிறோம்" இஸ்ரேலுக்கு எதிரான எந்தவொரு செயலுக்கும் மிகக் கடுமையான விலையை எதிரிகள் கொடுக்க வேண்டியிருக்கும்" என எச்சரித்திருக்கிறார்.

இந்தக் கட்டுரையை வாசகர்கள் வாசிக்கும் நேரத்தில் இஸ்ரேல் - ஹமாஸ் போர், உலகம் விரும்பாத பன்னாட்டுப் போராக மாறிவிடவும் வாய்ப்பிருக்கிறது.

# வீணடிக்கப்படும் உணவுகள்



உணவுப் பொருள் பற்றாக்குறை என்று ஒருபக்கம் பேசப்படுகிறது. மறுபக்கமோ கொஞ்சம்கூட குற்ற உணர்ச்சியின்றி உணவுப் பொருள்களை வீணாக்குவது தொடர்கிறது. வீடுகள், அலுவலகங்கள், உணவகங்கள், விசேஷங்கள், பொது நிகழ்ச்சிகள், அரசு உணவுக் கிடங்குகள் என்று எல்லா இடங்களிலும் உணவுப் பொருட்களை, உணவுகளை வீணடிப்பது நடக்கிறது.

சில நாடுகளில் ஒருவேளை சாப்பாட்டுக்கே போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆபிரிக்க கண்டத்தில் சில நாடுகளில் குழந்தைகளின் புரத தேவைக்காக புழுக்களை சாப்பிடக் கொடுக்கிறார்கள். சில நாடுகளில் மண்ணை சலிச்சு, கரைச்சு, அதை தோசை மாதிரி தட்டி வெயிலில் காய வைத்து சாப்பிடுகிறார்கள். எல்லாம் சோஷியல் மீடியாவில் பார்த்தது தான். ஆனா, நம்மளில் பல பேர் சாப்பாட்டை வீணாக்காத நாளே இல்லை...

'அவன் வீட்டு கல்யாணத்துல 51 வகை டிஷ் பரிமாறினார்கள். நான் 101 வகை பரிமாறுவேன் என்று பெருமைக்கு செய்து அதில பாதியை குப்பைத்தொட்டியில் கொட்டுகிறார்கள். தட்டு நிறைய உணவுகளை எடுத்துவிட்டு, முழுசாக சாப்பிட முடியாம மிச்சம் வைத்துவிட்டு, அதை நாகரிகம என்று நினைத்துகொண்டு இருக்கிறோம்.

சிலர், 'வீணாகுற உணவுகளை கோயில் வாசலில் இருக்கிறவர்களுக்கு கொடுத்திடுவோம்', 'முதியோர் இல்லங்களுக்கு கொடுத்திடுவோம்' என்று வழிகாட்டியிருந்தார்கள்.

**'யதார்த்தத்தில் இந்தச் சீற்றமும் வழிகாட்டலும் மட்டுமே உணவும் உணவுப் பொருள்களும் வீணாவதைத் தடுக்க போதுமானவையா..?' என்பது முக்கியமான கேள்வி ஒரு பக்கம்.எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் உணவை வீணாக்கும் மக்கள்... இன்னொரு பக்கம். ஒரு வேளை உணவுகூட இல்லாமல் தவிக்கும் மக்கள்... இதற்கெல்லாம் என்ன தான் தீர்வு?**

நாம் சாப்பிடுவது எமது வயிற்றுக்கே. எமக்கு எவ்வளவு தேவை என்பதை அறிந்து அளவாக உணவுகளை எடுத்தால் நிச்சயம் உணவு வீணடிக்கப்படுவது தவிர்க்கப்படும்.

நவீன யுகம் செல்ப் முறைமை எதற்காக கொண்டுவரப்பட்டது என்பதைக்கூட அறியாத முட்டாள்களாக நாம் இருப்பது வேதனை. உணவிடத்தில் இருக்கும் அனைத்தையும் எடுத்துவிட்டு பின் முழுவதையும் சாப்பிடாமல் குப்பைத்தொட்டியை நிறைப்பது பாவத்திற்குரியது.

இங்கு நாம் கொட்டும் ஒவ்வொரு உணவுப் பருக்கையும் பட்டினியில் வாடும் ஏழைகளுக்குக் கிடைத்தால் அதுவே மிகப்பெரிய மாற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கச் சொல்கிறது ஒரு தரப்பு, இல்லை பொது வேட்பாளருக்குப் போடச்சொல்கிறது வேறொரு தரப்பு இதில் எதை செய்ய வியாசரே?

**ரமணன்** **நாவற்குழி**

**வைத்திய மாபியாக்களின் பணம் அரசியல் தளத்தில் விளையாடுகின்றது போலவே?**

என்ன செய்வது ஏழைகளின் வயிற்றில் அடித்து உழைத்து அதில் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்கு நினைத்தவர்கள் எவரும் நிம்மதியாக வாழ்ந்ததாக வரலாறு இல்லை.
பணம் பணம் என்று பணத்தின் மீது மோகம் கொண்டு மனித மனங்களை ரணமாக்கி சேர்த்த பணம் பிணத்துக்கு சமம்.
பிணம் கூட பணம் என்றால் வாயைத் திறக்கும் என்கிறார்கள். ஆனால் பணம் இருந்தால் தான் பிணம் நகரும் என்பதை கூற மறந்து விட்டார்களே
கோடான கோடி சொத்துக்கு அதிபதியாகி தங்க பஷ்பம் உண்ணுபவனும் தெருவில் பிச்சை எடுத்து உண்டு உயிர் வாழ்பவனும் இறந்த பின் சேர்வது ஒரே இடம். நெருப்பு தின்றபின் ஒரு பிடி சாம்பலே.

**மதுவன்** **மீசாலை**

**ஜே.வி.பியிடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் தயார் என்கிறாரே அநுர?**

நடைபெற இருக்கும் தேர்தல் நிச்சயம் ஜன நாயகத்தினூடான தேர்தலாகவே அமையும்.
ஜனநாயகத்தேர்தலில் மக்கள் ஆணை யாருக்கோ அவர்களே இந்த நாட்டை ஆள்வார்கள்.
மக்கள் ஆணை ஜே.வி. பிக்கானதாக இருந்தால் அதில் ஒன்றும் தவறில்லையே.
ஊழலுக்கு எதிரான ஆட்சியினை நாம் நடத்துவோம் என்கிறார். அநுரகுமார திஸநாயக்க.
புதியவர்களிடம் ஆட்சிப்பீடம் கைமாறும் போது சில- சுத்திகரிப்புக்கள் துடைத் தெறிதல்கள் நடக்கவே செய்யும்.
அது இந்த நாட்டைச் சுத்தப்படுத்தும்.

**இளங்கோ** **மானிப்பாய்**

**மானிடருக்கு நிம்மதியோடு அமைதியைத் தந்து மனிதனை நெறிப்படுத்த ஆன்மிகம் தவறிவிட்டதே வியாசரே?**

ஆன்மிகத் தேடல் எப்போது மனிதனிடம் இல்லாது போனதோ அதுவே நவீன தொழில்நுட்ப வளர்ச்சி என்றாகிவிட்டது.
முன்பு இயற்கை இயற்கையாய் இருந்தது. காற்று தூய்மையாய் இருந்தது. உணவுகள் நஞ்சற்று இருந்தது. மனிதர்கள் அன்பைக் கடத்தும் காந்தமாகச் செயற்பட்டனர்.
இதை அனைத்தையும் தொழில்நுட்பம் விழுங்கிவிட்டு நவீன இயந்திர உலகு என்பதை பிரசுவித்துவிட்டது.
இதில்தான், பிறந்த பச்சிளம் குழந்தையை அடித்துக் கொள்கிறாள் தாய்.
மனிதம் மறந்த மனிதனை மீண்டும் அன்பு, இரக்கம், ஈகை செய்ய இச்சை கொள்ளச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய தேவை.





**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிறிதர்** **மானிப்பாய்**

**நான் என்று வாழும் மனிதனை நாய் கூடத் திரும்பிப் பார்க்காது என்கிறார்களே உண்மையா மாமா?**

நான் என்ற ஆணவம் சூரப த்மனை ஆட்டிப்படைக்கிறது.
அவனை அழிக்க முருகன் தோன்றுகிறான். சூரனுடன் போர் புரிகிறான்.
போரின் உச்ச கட்டம். அப்போது யாரும் கண்டிராத தனது திருப் பெரும் வடிவத்தை சூரனுக்குக் காட்டுகிறான் முருகன்.
ஒரு நொடி மனமுருகி கை கூப்பிய சூரனின் நான் என்ற ஆணவம் கும்பிட்ட கையை இறக்குகிறது.
முருகன் மீது மீண்டும் போர் தொடுக்கிறான்.
இதன்பின்பும் சூரனை விட்டு வைக்கக் கூடாது என முடிவெடுத்த முருகன். வேலெடுத்த சூரனை வதம் செய்து தேவருக்கு நிம்மதி யான வாழ்வைக் கொடுக்கிறான்.
நான் என்று ஆடிய எவனும் நின்றதும் இல்லை. நிலைத்ததும் இல்லை. இதுவே தத்துவம்.



ஜே.வி.பியிடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் தயார் என்கிறாரே அநுர?

**விஜயதரன்** **உரும்பிராய்**

**ஜனாதிபதியின் யாழ் வருகையும் இனப் பிரச்சினைக்கான தீர்வு எனும் கதைகளும் வளமையாகிவிட்டதே வியாசரே?**

தேர்தலை மையமாகக் கொண்டவர்களிடம் எதையும் பேசித்தீர்த்துவிட முடியாது.
எப்பாடுபட்டாவது பதவியிலே ஏறிவிட வேண்டும் எனும் ஆசை யாரைத் தான்விட்டு விடும். அதில் ஒன்றும் ஜனாதிபதி விதிவிலக்கில்லையே.
இப்போது நாம் கூட பொதுவேட்பாளர் என ஒரு புதிய பாதையில் பயணிப்பதற்கு துணிந்து விட்டோம்.
இந்த பாதையின் முடிவு எப்படி இருக்கப் போகிறது என்பது கூடத் தெரியவில்லை.
ஆனால் தமிழினத்தின் எதிர்காலம் சூனிய மாவது நிச்சயம்.

**சயந்தன்** **அச்செழு**

**குடும்பத்தில் மாமியார் மருமகன் சண்டை எப்படி இருக்கும் வியாசரே?**

பெரும்பாலும் மாமியார் மருமகன் சண்டை மனைவியின் மண்டை உடைவதிலே முடியும்.
மருமகன் கொஞ்சம் உசாரானவராக இருந்தால். இதுவே மருமகன் அப்பாவி யாக இருந்தால் அவரின் கதி அந்தோகதி தான்.
வேண்டா மருமகன் இருந்தால் குற்றம் நடந்தால் குற்றம் என்று புதுமொழி உருவாகிவிடும்.
மருமகன் மாமியார் உறவு தாய், மகன் போன்ற உறவில் இருக்க வேண்டும்.
அப்போது தான் தன்மகள் நிம்மதியாக இருப்பாள் என்பதை மாமியார்கள் புரிந்து கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்.

**சுந்தரம்** **துன்னாலை**

**ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கச் சொல்கிறது ஒரு தரப்பு, இல்லை பொது வேட்பாளருக்குப் போடச்சொல்கிறது வேறொரு தரப்பு இதில் எதை செய்ய வியாசரே?**

கண்ணைக் கட்டிக்கொண்டு கிணற்றில் விழுவது ஒரு டிசைன் என்றால் கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் விழுவது வேறொரு டிசைன்.
கிணறு இருக்கிறது என்று தெரிகிறது. போக வேண்டாம் என்று பலர் தடுக்கிறார்கள்.
இல்லை அந்தக் கிணற்றில்தான் வீழ்வேன் என்று அடம்பிடித்து வீழ்ந்தால் அதற்கு எதுவுமே செய்து விட முடியாது.
பொது வேட்பாளர் விடயமும் இப்படிப்பட்டதோ என்று தோன்றுகிறது.
எதிர்வரும் தேர்தலில் ரணில் தவிர்ந்து ஒரு புதியவர் ஜனாதிபதியாகும் நிலையில் பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாடு சரியானதா? தவறானதா?என்ற கேள்வி எழும். அப்போது எந்த முகத்தை வைத்துக் கொண்டு நாம் பேரம் பேசமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் அவர்கள் தனது 93 ஆவது வயதில் காலமானார்.

மறுமலர்ச்சிச் சிந்தனையுடைய ஒரு சிறந்த அதிபர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

**விதானையார்:-** மன்னார் பொது வைத்தியசாலையில் மருத்துவர்களின் அசண்டையீனத்தால், உயிரிழந்த இளம் பெண்ணின் மரணம் தொடர்பில் சுகாதார அமைச்சு நீதியான விசாரணை நடத்த வேண்டும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில் நிறைவேற்ற வேணும்.

இந்த விசாரணை, உயிரிழந்த அந்த இளம் தாயை மீட்டுத் தரப் போவதில்லை.

ஆனால் இது போன்ற அபத்தம்-அநியாயம் இனியும் நடக்கக் கூடாது என்பதற்காக குறித்த மரணம் தொடர்பில் நீதி விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும்.

இவ்வாறு விதானையார் கூற, அந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக நிறைவேற்றினர்.



வே.தனபாலசிங்கம்
(ஓய்வு நிலை அதிபர்)

தொடர்ந்து ஆலடியில் நிசப்தம் நிலவியது.

நிசப்தத்தைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல்கொடுத்தார்.

**வாத்தியார்:-** அண்மைக் காலமாக வடக்கு மாகாண வைத்திய சாலைகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

விமர்சனங்கள் தேவையானவை, அதேநேரம் அர்ப்பணிப்போடு சேவையாற்றுகின்ற மருத்துவர்களதும் மருத்துவ சேவையாளர்களதும் மனங்கள் நோகாமல் பார்த்துக் கொள்ள வேணும்.

சமுக வலைத் தளங்களில கண்டபாட்டில நாங்கள் எழுதி விட, அது ஒட்டு மொத்த மருத்துவர்களையும் தாக்கிப் போடும். உண்மையில எங்கட மருத்துவ சேவை உன்னதமான வளர்ச்சியை எட்டியுள்ளது.

குறிப்பாக, எங்கட வட மாகாணத்தின்ர மருத்துவத்தின் தலையாக இருக்கின்ற யாழ்.போதனா வைத்தியசாலையின்ர வளங்கள் உன்னதமாக இருக்கிறதோட, வைத்தியசாலைக் கட்டமைப்பும் நோயாளர் விடுதிகளின் தூய்மையும் திருப்தி கரமாக இருப்பது உண்மையில வரவேற்கப்பட வேண்டும்.

அதேநேரம் அனைத்து மருத்துவ நிபுணர்களும் தங்களின் சேவைகளை முழுமையாக வழங்கும் போது, யாழ்.போதனா வைத்தியசாலை மிக விரைவில பெரிய மாற்றத்தை-எழுச்சியை எட்டும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

**கங்காணி:-** அது மட்டுமல்ல வாத்தியார், எங்கட வட மாகாணத்தில இருக்கிற அத்தனை பிரதேச வைத்தியசாலைகளும் அனைத்து வளங்களுடனும் உச்சப் பயன்பாட்டுடனும் செயற்படும் போது,

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடையும்.

உண்மையைச் சொன்னால், யாழ்.போதனா வைத்தியசாலையில நோயாளர்கள் நிரம்பி வழியும் போது, அவர்களுக்குச் சிகிச்சை வழங்குவதிலும் அவர்களைக் கவனிப்பதிலும் இடர்பாடு ஏற்படத்தான் செய்யும். இது யதார்த்தம்.


**மூப்பர்:-** கங்காணியார் சொல்லுறது உண்மை தான். இப்ப பாருங்க எங்கட வட பகுதியில ஒவ்வொருநாளும் விபத்துக்கள் நடந்த வண்ணமிருக்குது. அதிலும் பலர் காயப்படுகினம்.

கால், கை முறிந்து போகுது. ஏன் படுகாயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது இறப்புகளும் நடக்குது. இதால யாழ். போதனா வைத்தியசாலை திணறுது.

மிக மோசமான இந்த நிலைமையைத் தவிர்க்கிறதாக இருந்தால், விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்க வேணும்.

**சாத்திரியார்:-** அதை எங்க குறைக்கிறது. இளம் பெடியள் கண்டபாட்டில மோட்டார் சைக்கிளில் ஓடுகினம்.

சாரதிகள் கையடக்கத் தொலைபேசியில கதைத்தபடி வாகனங்களைச் செலுத்துகினம்.



## யாழ்.போதனா வைத்தியசாலையின்ர பணிச்சுமையைக் குறைக்க வேணும்

இதைவிட, போக்குவரத்து நெரிசலும் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத சாரத்தியமும் சேர்ந்து எங்கட மண்ணில விபத்துக்களை மலியச் செய்திருக்குது.

இந்த விபத்துக்களைத் தடுத்தால்-குறைத்தால் எங்கட யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின்ர பணிச்சுமை கணிசமாகக் குறைந்து போகும்.

**பண்டிதர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள்.

தெரு நாய் குறுக்க போய் விபத்துக்குள்ளானவர்கள் எத்தனை பேர், இருந்தும் இதுவரை தெரு நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில எவரும் கவனம் செலுத்தாமல் இருக்கினம்.

**சிறாப்பர்:-** ஓ! இப்ப எங்கட பகுதியில மதுபானசாலைகள் அமைப்பதற்கான அனுமதிகளல்லோ வழங்கப்படுகுது.

அதிலும் போரால பாதிக்கப்பட்ட இடங்களில மதுபானசாலைகளை அமைத்தால், எங்கட மக்களின்ர நிலைமை எப்படியாகும்.

**வாத்தியார்:-** சிறாப்பர் சொல்லத்தான் ஞாபகம் வருகுது.

எங்கட தமிழ் மண்ணில இளைஞர்களின்ர எதிர்காலத்தைப் பாதுகாக்கின்ற திட்டங்களை எங்கட ஊர்களில இருக்கிற அனைத்து கிராம முன்னேற்றச் சங்கங்களும் நடைமுறைப்படுத்த வேணும்.

இல்லை எண்டால் எங்கட தமிழினம் தனது பண்பாட்டையும் வாழ்வியலையும் இழந்து துன்பப்படும்.

ஆகையால எல்லாப் பொது அமைப்புகளும் தலைவர்களும் பாடசாலைகளும் இது விடயத்தில மிகவும் விழிப்போட செயலாற்ற வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஏற்றுக் கொள்வது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



23 செங்கை ஆழியான்

கொத்தளங்களை இணைக்கின்ற மதில் ஒவ்வொன்றினதும் நீளம் ஏறத்தாழ 554 அடிகளாகும். கொத்தளங்களின் சுற்றளவைத் தவிர்த்து சுற்றுமதிலின் மொத்த நீளம் 3960 அடிகளாகும். முக்கோண வடிவினதான சொத்தளங்கள் ஐந்தினையும் உள்ளடக்கியதாக உட்கோட்டையின் சுற்றளவினைப் பார்க்கில் 6300 அடிகளாகவுள்ளது. கோட்டை மதிலிருந்து முக்கோண கூர் புடைக்கும் கொத்தளத்தின் ஒரு பக்க நீளம் 340 அடிகளாகவிருக்கின்றது.


யாழ்ப்பாணக் கோட்டை மதில் உச்சியில் இருபது அடி அகலமானது. அடித்தளத்திற்கு அது நாற்பது அடிவரை அகன்று விரிந்து செல்கின்றது. வெகு அற்புதமாக அம்மதில்களை அமைத்துள்ளனர் மதிலின் வெளிப்பக்கம் எறத்தாழ ஆறு அடி அகலத்தில் முருகைக்கற்களினால் கட்டடப்பட்டது. உட்பக்கம் நான்கு அடி அகலக்கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இவ்விரு கட்டுக்களுக்கும் இடைப்பட்ட எட்டடி அகலப்பரப்பு மண்ணால் நிரவப்பட்டுள்ளது. இம்மதில்கள் அகழி மட்டத்திலிருந்து ஏறத்தாழ முப்பது அடிகள் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. உண்மையில் இவை பலமான அரண்களே. எவ்வளவு வலிமை வாய்ந்த பீரங்கிகளாலும் தகர்த்தெறிய முடியாத மதிற்சுவர்கள்.

உட்கோட்டையைச் சுற்றி அமைந்திருக்கும் சுரியும் நீரும் கொண்ட அகழி அற்புதமான அழகும், பாதுகாப்பும் கொண்டது. உயர் கொத்தளப் பகுதியில் அகழியின் அகலம் 132 அடிகளாகவும், மதிலின் தடுப்பகுதியிலிருந்து நோக்கும்போது அகழியின் அகலம் 158 அடிகளாகவும் இருப்பதனைக் காணலாம். 3960 அடிகள் நீளமான கோட்டையின் சுற்றுமதிலைச் சூழ்ந்து 6400 அடிகள் நீளமான அகழியின் வெளி சாய் சுவர் அமைந்திருக்கின்றது.

அகழிவெளிமதிற் சாய்சுவரோடு, தாழ் கொத்தளங்கள் நான்கு அமைந்துள்ளன. இந்தத் தாழ் கொத்தளங்கள்

கோட்டை மதில் ஒவ்வொன்றின் நடுப்பகுதிக்கு நேர் எதிரில் அகழிக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை வடிவில் சிறிய கோட்டையமைப்பின. அதனால் இவற்றினைச் "சின்னக் கோட்டைகள்" எனவும் கூறுவர். முற்றவெளியின் முனியப்பர் கோயில் அருகில் இத்தகைய தாழ் கொத்தளக்கோட்டையுள்ளது. வடக்கில் வீரசிங்க மண்டபத்தினை நோக்கியும், மேற்கில் பண்ணைப் பொலிஸ் விடுதியை நோக்கியும் சின்னக் கோட்டைகள் எனப்படும் தாழ் கொத்தளங்கள் உள்ளன. இன்னொரு தாழ் கொத்தளம் பிரதான வாயிலின் நுழை பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 120

# கடல் புறா

## குடிப் பழக்கம்

அந்தச் சந்துஷ்டியும் மனத்திருப்தியும் அவனுக்கு மட்டுமல்ல, இளையபல்லவனுக்கும் இருந்ததைச் சாதாரண மக்களும் மற்றோரும் கண்டார்கள். மறுநாள் முதல் முன்னைவிட அதிக சாந்தியுடனும் பரமதிருப்தியுடனும் நகரத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளிலும் தன் மரக்கலத்தைப் பழுதுபார்க்கும் முயற்சியிலும் இறங்கினான் இளைய பல்லவன். நகரத்துக்குப் பூர்வகுடிகளிடமிருந்து ஏற்படவிருந்த ஆபத்தின் விளைவாகக் கோட்டை மக்களை எச்சரிக்கையுடன் இருக்கச் செய்வதற்காக, அங்கிருந்த சூதாட்ட அரங்கங்களையும் மதுக்கடைகளையும் ஆரம்பத்தில் அடியோடு அனுமதிக்காத இளையபல்லவன்.

சில நாள்களில் இரவு நேரங்களில்மட்டும் சிற்சில கடைகள் திறக்கப்படுவதற்கு அனுமதி கொடுத்தான். அனுமதி கொடுத்ததன்றி, தானும் அமீருடன் அக்கடைகளுக்குச் சென்று மற்றவர்களுடன் லேசாக மது அருந்தியும், சொக்கட்டானாடியும் பெரிதாகச் சிரித்தும் மக்களைத் திருப்தி செய்து வந்தான். இளையபல்லவனின் இந்த லேசான மாறுதல் மக்களுக்கு மட்டுமல்ல, பலவர்மனுக்கும் மிகுந்த திருப்தியை அளித்தது. பலவர்மன் அடிக்கடி இளையபல்லவனைத் தனது அறைக்கே அழைத்துத் தன்னிடமிருந்த சிறந்த மதுவகைகளை அவனருந்தும்படி செய்தான்.

இளையபல்லவன் அவனிஷ்டப்படி அந்த மது வகைகளை லேசாக ருசி பார்த்தான்ஆனாலும் அவ்வளவாக அவற்றில் ஆசை காட்டாததைக் கண்ட பலவர்மனுக்கு இளையபல்லவன் ரசிகனா என்பதில் பெரும் சந்தேகமுண்டாகவே அதை வெளிப்படையாகவே கேட்க முற்பட்டு, "படைத்தலைவரது நாட்டில் சிறந்த மது வகைகள் கிடையாதா?" என்று வினவினான்.

அந்தச் சமயத்தில்தான் மதுக் கிண்ணத்தை வாயில் வைத்து ஓர் உறிஞ்சு உறிஞ்சி முகத்தைப் பரமகசப்பாக அடித்துச் சுளித்துக்கொண்ட இளையபல்லவன், "சிறந்தது எது என்பது அவரவர் ருசியைப் பொறுத்தது கோட்டைத் தலைவரே" என்று கூறினான், கிண்ணத்தைச் சட்டென்று எதிரே இருந்த மஞ்சத்தில் வைத்து என்னிடமுள்ள மது வகைகளை விடச் சிறந்தவை உலகத்தில் வேறெந்த நாட்டிலும் கிடையாது இளைய பல்லவரே" என்றான் பலவர்மன் மிகப் பெருமையுடன். தவறு பலவர்மரே! சுத்தத் தவறு, என்றான் இளைய பல்லவன் திடமாக. "தவறா?" கோபத்துடனும் ஏளனத்துடனும் எழுந்தது. பலவர்மன் கேள்வி.

ஆம். தவறு. முக்காலும் தவறு. வேறு எந்த இடத்தில் இதைவிடச் சிறந்த மதுவை அருந்தியிருக்கிறீர்? என்று எதிரேயிருந்த மதுக் கலயத்தைக் காட்டினான் பலவர்மன். இந்த ஊரிலேயே அருந்தியிருக்கிறேன்."

உனக்குச் சித்தப் பிரமைதான். எனக்கல்ல சித்தப்பிரமை, உமக்குத்தான் வீண் மயக்கம். உமது நகரத்தை நீரே சரிவர அறியவில்லை. இந்த ஊரில் மது வகைகள் கடைகளுக்குச் செல்லு முன்பு என்னிடம் காட்டப்படுகின்றன. தெரியுமா உமக்கு இந்த ஊரில் கொள்ளையரும் இருக்கிறார்கள். உமது கண்ணில் மண்ணைத் தூவியும், உமது வீரர்களை வசப்படுத்தியும் புது மது வகைளை ஊர்க் கடைகளுக்குக் கொண்டு செல்லலாம்."

எப்படித் தெரிந்துகொண்டீர்? சாப்பிட்டேன், தெரிந்துகொண்டேன்.

இதைக் கேட்ட பலவர்மன் உண்மையிலேயே கோபத்தின் வசப்பட்டான். எந்தப் பெரிய மனிதனுக்கும் சில சில்லறைப் பெருமைகள் உண்டு. அந்தப் பலவீனம் மது சம்பந்தப்பட்ட வரையில் பலவர்மனுக்கு இருந்ததால், அவன் விடாப்பிடியாகத் தன் மாளிகை மதுவே சிறந்த தென்று அடம்பிடிக்க, அது இல்லையென இளைய பல்லவன் திட்டமாகக் கூற, இருவருக்கும் வார்த்தை வளர்ந்தது.

வார்த்தை தடித்த தால் எந்த இடத்தில் சிறந்த மது இருக்கிறதென்பதைக் காட்டும்படி பலவர்மன் கேட்க அன்று முதல் ஊரில் மதுக்கடைகளுக்கு இரண்டு பேருமே விஜயம் செய்ய ஆரம்பித்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிசைந்த சோற்றுருண்டை

வெள்ளி நிலா விளக்கேற்ற
தென்றல் காற்று வரவேற்க
தந்தையின் உரத்த குரல்
குடும்பத்தை கூட்டிடவே
மெல்லிய குளிரடிக்க மென்மணலில்
மெதுவாக அமர்ந்திருக்க
பிசைந்த சோற்று வாசனை பசியை கிளறிவிட
தாயின் வருகைக்காய் காத்திருக்கும் சேய்கள்
குந்தி இருந்து முகம் பார்த்து மகிழ்ந்துண்ட
எமது முன்னோரின் விந்தை மிகு செயல்

உணவுக்கு பஞ்சமில்லை உணவில் நஞ்சுமில்லை
உடன் உணவுமில்லை பதனிட்ட உணவுமில்லை
தொற்று நோயுமில்லை தொற்றா நோயுமில்லை
தொன்னூறை தாண்டினால் தான் இறப்பும் இரந்து நிற்கும்
ஓய்வற்ற உழைப்பும் ஓய்வுக்கும் நேரமுண்டு
உடலை வருத்தினாலும் உடலில் வருத்தமில்லை

தரையில் படுத்தாலும் தளராத உடல்நலமும்
நடையில் சென்றாலும் நாட்படாத காரியமும்
பகையென்று சொல்வதற்கு பாரம்பரியம் விட்டதில்லை
தொல்லை என்று நினைத்து தொலைந்து போனதில்லை

வல்லமை தருவதற்கு மனைவியின் கைப்பக்குவமும்
மாண்டுவிடாதிருக்க பிள்ளையின் பெரும்பேறும்
விடிய விடிய நீர் அருந்தி விடிந்த பின்னர் மோர் அருந்தி
கலப்பற்ற உணவை உண்டு காத்திரமாக வாழ்ந்தான்
எம் முன்னோன்–முடிந்தால் பின்பற்றி வாழு.

அராலியூர் ப.தர்மகுமாரன்

## நலம் எண்ணுவமோ



உருளும் உலகப் பந்தில்
விரிந்துள்ள தேசங்களிலே
பிரதேசத்திற்கேற்ற வகையில்
மாந்தர் பல இனங்களாக வதிகின்றனர்
ஒவ்வோரினத்திற்கும் தனித்துவம் மிக்க
பண்பாட்டு விழுமியங்கள் உள்ளன
இலங்கைத் தமிழர் எமக்கும்
சிறந்த பண்பாடுகள் உள்ளன
ஆயினும் அந்நிய ஆக்கிரமிப்பினால்
எம் பண்பாடுகள் சிதைவுற்றன
சிதைவின் உச்சத்தினின்று
அந்நியமே கதியென்றாயுள்ளோம்
மீந்திருக்கும் பாரம்பரியங்களும்
அழிய நாமே துணையாகின்றோம்
மகிழ்வித்தலென்ற பெயரில்
ஆபாச நடனங்களையும்
மனம் மலினமாகும் நிகழ்வுகளையும்
நடத்துவது எவ்வகையில் சரியாகும்?
மகிழ் களங்கள் தேவையானவைதான்
எனினும் பாலியலில் வெறியாவதும்
வக்கிரங்களை தூண்டுவதுமான
நிகழ்வுகள் தேவையா?
சமூக ஆரோக்கியத்திற்கு உதவுமா?
எத்தரத்தில் நாமிருந்தாலும்
மனித மனம் மேம்படும்
நிகழ்வுகளில் ஈடுபடுவதற்கும்
அவற்றை கண்டுணர்வதற்கும்
எம்மனதில் திடம் கொள்வோமா?

சி.இ.அன்புதுரை
சம்மட்டிஓலை, மானிப்பாய்.

## மனைவி

வாழ்க்கை எனும் புத்தகத்தின்
துன்பமான பக்கங்களையும் கடந்து
தனக்கென்று வாழாமல்
தன் குடும்பத்திற்காகவே
இறுதிவரை வாழ்ந்து மாடாகவே உழைத்து
மரணித்துப் போகும்
உன்னத பாத்திரம் தான் "மனைவி"

K.ஈஸ்வரன், உரும்பிராய்

## மௌனத்தின் தேடல்- 728



## முடக்கப்பட்ட நிலங்கள்

முட்கம்பி வேலிக்குள் எம்நிலங்கள்
முடக்கப்பட்டு விட்டனவே
தாத்தா பாட்டி வாழ்ந்து வந்த
தாய் மனைகள் எல்லாம்
தரைமட்டமாகி விட்டதே
முப்பது வருடங்களுக்கு மேலாகியும்
முதிசங்கள் எம் கைக்கு வரவில்லையே
விரைவாக எம் நிலங்களை
விடுதலை செய் என வீரமுழக்கம்
இட்டபோதினிலும்
செவிடன் காதில் ஊதிய சங்குபோல்
ஆகிவிட்டதே
தமிழ் மண்ணை மீட்டிடுவீர
தரணியில் தமிழினம் வாழ வழி
செய்திடுவீர்

ஆ.செல்வி, திருநாவலூர்

## மௌனத்தின் தேடல்- 729



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சாங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நம்பிக்கை

யார் நம்மை மீட்பாரென
கால் கடுக்க காத்திருக்கும்
உறவுகளே!
உங்கள் உழைப்புத்தான்
உங்களுக்கு உதவும்
யாரையும் நம்பாதீர்கள்
உங்கள் நம்பிக்கை
நிச்சயம் வெளியேற்றும்

துணவியூர் நடா

## ஏங்கும் உள்ளங்கள்

முட்கம்பி அடைப்புக்குள் அகப்பட்ட தம்பிகளா!
விழிகள் தேடுகின்றன
யார் வரவை நோக்கி
கள்ளமில்லா சிறுவர்களே இழந்து விட்டது எதுவோ
குடும்பமா? கல்வியா? இல்லிடமா?
உங்கள் உள்ளக் குமுறல் ஏக்கப் பார்வையில்
தடை விலகி என்றோ வெளியில் வருவீர்கள்!
எங்கே உங்கள் உள்ளக் குமுறல் தீயாக தீபமாக எரிந்து...
மாறக தீபமாக மாறட்டும் தீபங்கள் ஏற்றட்டும்

அபி குலமாலிகா, சித்தன்கேணி.

## தம்பி!

உன் மௌனம் கண்டு
பயந்துவிட்டாய் என்று
எதிரி நினைத்துவிடக் கூடாது
மௌனத்தின் பின்னரான
உனது அடி
எதிரி மீது இடியாக இறங்க வேண்டும்
எதற்கும் துணிந்தவனாய்
நிமிர்ந்து நில்... அதுவே வெற்றி தரும்

உதிஸ்ரன்

## வேலியே பயிரை...

ஊர்களுக்குள் காட்டு யானைகள்
கூட்டாகவும் தனித்துமாய்
பெருகி வரும் அட்டகாசங்கள்
உயிர்களுடன் பயிர்களையும்
காக்க முள்வேலியிட்டாலும்
தாக்குப்பிடித்து நிலைப்பதில்லை
இங்கும் மூன்று தலைமுறைகளும்
முள்வேலிக்குள் முனுகும் சத்தம்
இதை மறைக்க முயற்சித்தாலும்
வதைகளை என்றும்
மறக்க முடிவதில்லை

[illegible]

## ஓடிக்கொண்டேயிரு

முட்கம்பி வேலிக்குப் பயந்து முன்னேறாதிருந்தால்
மீட்சியில்லை உன் இனத்திற்கு!
எடுத்துவை அடியை உன் ஒரு அடியைத் தொடர்ந்து
ஓராயிரம் அடிகள் ஒன்றுசேரும் அந்த ஒன்று சேர்க்கை
ஓயாத எம் தாகத்தைத் தீர்க்கும்
அதுவரை ஓயாது ஓடிக்கொண்டேயிரு

இந்திரபுத்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

பாடியவர் : டி எம் சௌந்தரராஜன்
இயற்றியவர் : கண்ணதாசன்
திரையிசை : எம் எஸ் விஸ்வநாதன்



உள்ளம் என்றொரு கோவிலிலே
தெய்வம் வேண்டும் அன்பே வா
கண்கள் என்றொரு சோலையிலே
தென்றல் வேண்டும் அன்பே வா
அன்பே வா அன்பே வா வா வா வா

நீயிருந்தால் என் மாளிகை விளக்கெரியும்
நிழல்கொடுத்தால் என் நினைவுகள்
விழித்துக்கொள்ளும்
பாதையிலே வெளிச்சமில்லை
பகல் இரவு புரியவில்லை
பார்வையும் தெரியவில்லை
ஆயிரம்தான் வாழ்வில் வரும் நிம்மதி
வருவதில்லை

உள்ளம் என்றொரு கோவிலிலே
தெய்வம் வேண்டும் அன்பே வா...

வான்பறவை தன் சிறகினை எனக்குத்தந்தால்
பூங்காற்றே உன் உதவியும் எனக்கிருந்தால்
வானத்திலே பறந்து சென்றே
போனவளை அழைத்துவந்தே
காதலை வாழவைப்பேன்
அமுதமுகம் சிரித்திருக்க ஆசைக்கு உயிர்
கொடுப்பேன்

உள்ளம் என்றொரு கோவிலிலே
தெய்வம் வேண்டும் அன்பே வா....

# அடிமை நிலை ஏனோ!

விநாடி விநாடியாக நகரும் வாழ்வியல், மரணத்தின் புள்ளியில் சென்று முடிவடைகிறது. பிறந்தவர்கள் அனைவரும் இறப்பது மறுக்க முடியாத ஒன்று. ஆனால் நமது வாழ்வியலில் மரணத்தைத்தேடி நாமே ஓடுகிறோம். கற்றறிந்தவர்களால் நிரம்பிய யாழ்ப்பாணச் சமூகம் இன்று பேரவலத்திற்குள் திணிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. இளையோரின் பலதரப்பட்ட கொலைகள், தற்கொலைகள், திடீர் மரணங்கள் நாளாந்தம் நமக்குச் செய்வதென்ன?

நாம் பலிகொடுத்த உயிர்களைப் பட்டியலிடமுடியாது. இது இவ்வாறிருக்க விபத்து மரணங்கள் இளையோரைக் காவு கொண்டுள்ளன. இதற்கப்பால், இளையோரின்தற்கொலைகள் கொஞ்ச நஞ்சமா? மாறிவிட்ட பழக்கவழக்கங்களும், ஒழுக்கப் பிறழ்வுகளும் மரணங்களையே தருகின்றன. வாழ்வியலின் யதார்த்தம் புரியாதவர்களா நாம்? "நெருகல் உளகொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு என்று அன்றே தெய்வப் பெருமை உடைத்து இவ்வுலகு என்று அன்றே தெய்வம் புலவின் சொல்லி சென்றுள்ளான். ஆகவே மரணத்தின் வாசலில் தான் நாம் நிற்கிறோம். இந்த இடத்தில் இடது வாழக்கிடைத்த காலத்தை வாழ்ந்து விட்டுச் செல்ல வேண்டுமல்லவா! அப்படியானால் உயிரிழப்புகள் ஏன்?

இன்று அடிமைநிலை கோலோச்சுகிறது பெரும்பான்மை சிறுபான்மை, ஏழை, தனவான், உயர்ந்தவன் தாழ்ந்தவன், சாதிய அடக்குமுறை, ஆணுக்குப் பெண்ணடிமை, இவற்றைவிட மதுவுக்கு அடிமை, மங்கைக்கு அடிமை, செல்போன் அடிமை, நோய்களுக்கு அடிமை, போதைக்கு அடிமை என நீண்டு செல்கிறது இந்த அடிமை நிலை. எங்கள் சமூகத்தை இன்று உலுப்பிப் போடுகிற துர்ப்பாக்கிய அடிமை என்றால், பெண்ணடிமை, மது, போதைக்கு அடிமை, செல்போன் அடிமை போன்றனவே எங்கள் சமுகத்தை உற்று நோக்க வேண்டிய நேரம் இது. இப்போது நோக்கத் தவறின் எப்போதும் நோக்கமுடியாது. மாறாக அடுத்த சந்ததியின் மரணத்தை அருகில் இருந்து பார்க்கும் துர்ப்பாக்கியசாலிகளாக நாம் உள்ளோம் என்று நினைக்கும் போது தொண்டை வறள்கிறது. நெஞ்சு கனக்கிறது.

யாழ். சமூகம்,படித்த சமூகம் திறந்த வெளிச்சிறையில் மின்சாரம் இல்லாத நிலையிலும் குப்பி விளக்கிலும், மெழுகு திரிச்சுடரிலும் படித்து பல்கலைக்கழக வாசற்கதவைத் திறந்தவர்கள் நாம். இன்று இதே படித்தவர்களுக்கு ஏற்படுகின்ற ஏற்படுகின்ற மன அழுத்தம், தொற்றும், தொற்றா நோய்கள் என்பன திடீர் உயிரிழப்புகளை தருகின்றன. மாற்றுவழி தேடமுடியாது. மரணத்தை நோக்கி மதுவுக்கு அடிமையாவோர், போதைக்கு அடிமையாவோர் பல்கிப் பெருகியுள்ளனர். தாம் கற்ற கல்வி, தங்களால் உருவாகும் குடும்பங்கள், தங்களால் வழிநடத்தப்படும் பயனர் பற்றிச் சிந்திக்க மறந்து அடிமையாகிறார்கள். விளைவு தற்கொலை அல்லது திடீர் மரணம்.

எம்மினம் மீள வேண்டும் இழந்த அனைத்தையும் மீட்டுக் கொள்ள கல்வி என்ற பூரண பலம் கூறிய ஆயுதம். ஆனால், பலமிழந்தவர்களாக, அறிவின் கூர்மை மழுங்கடிக்கப்பட்டவர்களாக மதுவுக்குள் புதையுண்டு போவது ஏன்? ஒரு சில வருடங்களாக போதைப் பொருள்களுக்கு அடிமையாகி தற்கொலை செய்த ஆசிரியர்களை, நம் இளையோரை அறிவோம். அதேபோல் இன்றுவரை குடிக்கு அடிமையாகி குடும்பத்தையே நடுத்தெருவில் விட்டு செல்லும் மதுப்பிரியர்களையும் அறிந்தோம். மதுவின் தாக்கமும், போதைப் பொருட்களின் தாக்கமும் பல இல்லத்தரசிகளை கைம்பெண்களாக உருவாக்கியுள்ளது. அப்பாவிப் பெண்களை, சிறுமிகளை பாலியல் வன்புணர்வில் மறுமைக்குள் தள்ளியுள்ளது. இவற்றைக் கண்டும் கேட்டும் நாம் குடிக்கு அடிமையாவதா? போதைக்கு அடிமையாவதா?


நாம் இப்போது வாழுங் காலம் மிகவும் பயங்கரமானது. பிள்ளைகளை யாரோடும் பழகவோ விளையாடவோ விடுவதில்லை என்ற பாரிய குற்றச்சாட்டு நம்மத்தியில் உண்டு. உண்மையில் ஒரு தடவை சிந்தித்துப் பார்த்தால், நட்புறவுகள் கூட ஆபத்தாகவே உள்ளன. அறம் சார்ந்து வாழ்பவர்களையே புரட்டிப் போடும் அளவுக்கு இன்றைய நட்புறவுகள் வளர்ச்சி கண்டுள்ளன. "உயிரைக் காப்பான் தோழன்" என்ற நிலைமாறி "உயிரை எடுப்பான் தோழன்" என்ற வாசகமே பொருத்தப்பாடாக உள்ளமை கண் கூடு.

ஆபத்துகளில் இருந்து தப் பித்துக் கொள்ளும் பகுத்தறிவு இருக்கும் போது படுகுழியில் விழலாமா? உலகின் மூத்தகுடி நாம். நம் வாழ்வுக்கு முடிவுரை எழுதுவது ஏன்? நெருப்பை வயிறில் கட்டிக்கொண்டு பெற்றவர்களும், கட்டியவளும் புலம்புவது ஏன்? மது என்னும் அரக்கன் கற்றோரின், சமூகத்தின் முன்மாதிரிகளின் குரல்வளையை நசுக்கிப் போடும்வரை நாம் அமைதி காப்பது ஏன்?

குடிக்கு அடிமையாகி வாழ்வை நரகமாக்கும் அன்புள்ளோரே, உங்களைத் தாங்குகின்ற நீங்கள் தாங்குகின்ற உங்கள்பெயரை உரத்து உச்சரிக்கின்ற ஒருகுடும்பம் உண்டு அந்தக் குடும்பத்துக்கு அடிமையாகுங்கள். அங்கிருக்கும் ஒவ்வொரு உயிருக்கும் உங்கள் அன்பைக் கொடுத்து அரவணையுங்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் குடும்பமே முதுகெலும்பு. நகரும் வினாடிகளில் அறம்சார்ந்து பயனியுங்கள். குடும்பமும் நீங்களும் அழகாகச் செதுக்கப்படுவீர்கள். வரலாற்றுப் பூமியாம் எம்மண்ணில் இளையோரே உங்கள் இடறல் ஏன்? தடுக்கி விழாது சிறிய கற்களைத் தூக்கித் தூர வீசுங்கள். மது உங்கள் மதியை ஆள்வதா? மதுவால் மட்டுமே உங்களுக்கு மகிழ்ச்சி என்றால் தாய்மடி எதற்கு? மனைவியின் சுகம் எதற்கு? மழலை மொழி எதற்கு? குடும்பம் எதற்கு? நீங்கள் கற்ற கல்வி எங்கே? நீங்கள் கண்ட அரங்கங்கள் எங்கே?

ஆக சமூக வீழ்ச்சியில் எனக்கும் உங்களுக்கும் பெரும் பங்கு உண்டு இளையோர் வாழ்வியல் சீர் செய்யப்பட வேண்டும். அநியாய மரணங்களை அடியோடு களையப் வேண்டும். இளையோரே சிந்தியுங்கள்

**உடுவிலூர் கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்


411

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தற்கொலை எண்ணங்களை வெற்றி கொண்டு வாழ்வை நேசிக்க...

இன்றைய இளம்பிராயத்தினர் தம் வாழ்வை நேசிக்காமல், பிழையான முடிவுகளை எடுத்து, தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்கின்ற அவலத்தை அதிகமாக காணக்கூடியதாக இருக்கின்றது. இளம்பிராயத்தினரின் இழப்புகள், எமது சமூகத்தை பெருமளவு பாதிக்கின்றது. குறிப்பாக, இளம் பிள்ளைகள் தங்களது கல்வி பிரச்சினை, பரீட்சைகளில் ஏற்படும் பிரச்சினை, உறவுகளில் ஏற்படும் பிரச்சினை, போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் போன்ற பல்வேறு விடயங்கள் காரணமாக பிழையான முடிவுகளை எடுத்து, தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்கின்ற நிலைமை இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த இளம்பிராயத்தினர் ஏன் இவ்வாறு செய்கிறார்கள்? இளம் வயதிலே ஏன் தங்கள் வாழ்வை நேசிக்க மறுக்கிறார்கள்? என்ற யோசனை நம்மில் பலருக்கு இருக்கலாம். வாழ்வை நேசிப்பதென்பது, வெறுமனே சுயநலம் சார்ந்த விடயமல்ல. உண்மையில் சுயநலமானவர்கள் தம் வாழ்வை நேசிப்பதில்லை. வாழ்வை நேசிப்பதென்பது ஒரு கலை ஆகும். வாழ்வை நேசிப்பதற்காக நாம் எமது பிள்ளைகளைத் தயார்ப்படுத்த வேண்டும் அல்லது அதற்கான அறிவை அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

முக்கியமாக பிள்ளைகள் தங்கள் வாழ்வை நேசிக்கும் விடயத்தில் பெற்றோரின் பங்கு அதிகமாக இருக்கிறது என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினரின் பங்கும் மிக முக்கியமாகும். பொதுவாக,ஓர் ஆரோக்கியமான குடும்பச் சூழலானது, பிள்ளைகள் தம் வாழ்வை நேசிக்க அடித்தளம் இடுகிறது என கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, ஆரோக்கியமான குடும்பச் சூழலை உருவாக்குவதன் மூலம், பிள்ளைக்கு தம் வாழ்வை நேசிக்க கற்றுக் கொடுக்கலாம். உதாரணமாக, 13 - 15 வயதுடைய கட்டிளமைப் பருவத்தினர் தம் பெற்றோரின் ஆதரவினால் தம் வாழ்வை நேசிக்க பழகுகின்றனர் என பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.



குடும்பத்துடனான ஆரோக்கியமான உறவு முறை, தொடர்பாடல் போன்றவற்றால், பிள்ளைகள் தம் வாழ்வில் தன்னம்பிக்கையை வளர்த்து, தம் வாழ்வை நேசிக்க ஆரம்பிக்கின்றனர். இது பெற்றோரின் மிக முக்கிய கடமைகளில் ஒன்றாகும். பாடசாலைக்கு அல்லது பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் இளம்பிராயத்தினர், தம் வாழ்வை நேசிப்பதற்கு அந்த நிறுவனங்கள் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்.

இன்றைய நிலையில் 15-29 வயதான இளம்பிராயத்தினர் தம் உயிரை மாய்த்துக் கொள்கின்ற நிலைமை அதிகரித்துக் காணப்படுகின்றது. பொதுவாக குடும்பத்தில் நிலவும் சச்சரவுகள், உறவுகளுக்கிடையிலான முரண்பாடுகள், வன்முறை சார்ந்த சம்பவங்கள், பெற்றோரின் குடி அல்லது போதைப் பழக்கம் மற்றும் பெற்றோர் தங்களுக்கிடையில் முரண்படுவதோடு, குழந்தைகளுடன் நேரத்தை செலவழிக்காமல், தம் ஆதரவை அவர்களுக்கு காட்டாமல் இருத்தல் போன்றவையே, இந்த தற்கொலை பிரச்சினைகளுக்கு காரணங்களாக அமைகின்றன.

தற்கொலை எண்ணம் என்பது சாதாரணமான ஒன்றாகும். உலகில் பெரும்பாலான மக்கள் தற்கொலை எண்ணங்களிற்கு உட்படுகின்றனர். ஆனால், அவர்கள் எல்லோரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதில்லை. ஓர் எண்ணம், ஓர் செயற்பாடாக மாற்றமடைவதற்கிடையில் பல விடயங்கள் நடைபெறுகின்றன. பலருக்கு தற்கொலை எண்ணம் இருந்தாலும் கூட, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விடயங்கள் நடைபெறுகின்ற போது அவர்கள் தற்கொலை எண்ணத்தில் இருந்து முற்றாக விடுபடுகின்றனர். இத்தகைய எண்ணங்கள் அகக் காரணிகளாலும் வரலாம், புறக்காரணிகளாலும் வரலாம். அகக் காரணிகளால் இத்தகைய எண்ணங்கள் வருவதற்கு, பெரும்பாலும் மனநல குறைபாடுகள் அல்லது மனநோய்கள் காரணமாக அமைகின்றன. அதேபோல், வெளிப்புற அழுத்தங்கள் அல்லது பிரச்சினைகளும் தற்கொலை எண்ணம் தோன்ற முக்கியமான காரணிகளாகும். இவற்றைத் தாங்குவதற்கு, ஒவ்வொரு மனிதனும் ஒரு வகை தாங்குதிறன் பெற்றவனாக இருக்க வேண்டும். அதேபோல் இவ் எண்ணங்களை வெற்றி கொள்ள, தம்மைச் சார்ந்தவர்களின் ஆதரவை பெற்றிருக்க வேண்டியதும் அவசியம். இந்த ஆதரவை பெற்றோர்களும் மற்றவர்களும், இளம்பிராயத்தினருக்கு வழங்க வேண்டியது மிக அவசியம்.

மாணவர்களில் பலர் விரக்தியுற்று, வேதனையுற்று, வாழ்க்கையில் மற்ற தெரிவுகள் ஏதுமற்ற நிலையில் தற்கொலை முயற்சிக்கு செல்வது துர்ப்பாக்கியமான ஒரு நிலை ஆகும். ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் பத்தாம் திகதி, தற்கொலை தடுப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முக்கிய குறிக்கோள் நம்பிக்கையூட்டுதல் ஆகும். இந்த நம்பிக்கையை வெறும் வார்த்தைகளால் மட்டும் விதைத்து விட முடியாது. நமது செயல்களாலும் ஏற்படுத்துவதன் மூலமே தற்கொலைகளை தடுக்க முடியும். ஆகவே, இளம்பிராயத்தினரின் இத்தகைய துர்ப்பாக்கிய நிலையை தடுப்பதற்கு சமூக அங்கத்தவர்களாக நாம் அனைவரும் பங்களிக்க வேண்டும். இன்றைய நிச்சயமற்ற உலகில், இளம்பிராயத்தினர் நம்பிக்கையை இழப்பதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகும். எனவே, அனுபவம் மிக்க, அறிவுள்ள பெரியவர்கள் , பிள்ளைகளுக்கு தங்களுடைய செயற்பாடுகள் மூலம் நம்பிக்கையூட்ட வேண்டும். அவர்களுக்கு அத்தகைய நம்பிக்கை ஏற்படும் போது தான் தம் வாழ்வை இரசிக்கிறார்கள். இளம்பிராயத்தினர் வாழ்வை நேசிப்பதென்பது, அவர்களது முக்கியமான ஆற்றலாகும். எனவே, வாழ்வை நேசிப்போம் நேசிக்கச் செய்வோம்.


**Dr. S. சிவதாஸ்**
**உள மருத்துவ நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரமபிதா காட்டிய பாதை

# முணுமுணுக்க வேண்டாம்



பைபிளின் நற்செய்தியில் யோவான் 6:41-51பகுதி இன்று தரப்படுகின்றது: "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே" என்று இயேசு கூறியதால் யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள். இவர் யோசேப்பின் மகனாகிய இயேசு அல்லவா? இவருடைய தாயும் தந்தையும் நமக்குத் தெரியாதவர்களா? அப்படியிருக்க, "நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்" என இவர் எப்படிச் சொல்லலாம்? என்று பேசிக்கொண்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்துக் கூறியது: "உங்களிடையே முணு முணுக்க வேண்டாம். என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். கடவுள் தாமே அனைவருக்கும் கற்றுத் தருவார்" என இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது.

பைபிளின் நற்செய்தி இந்த இறைவார்த்தையில் இன்று மிகவும் முக்கியமற்றதாகத் தோற்றமளிக்கும் இந்த செய்தியைப் பற்றிக் கொஞ்சம் நோக்குவோம்: "நானே உயிர் தரும் உணவு என்று இயேசு கூறியதால், யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள்". "இயேசுவும் அவர்களைப் பார்த்து உங்களிடையே முணுமுணுக்க வேண்டாம்" என்று கூறுகிறார்.

முணுமுணுப்பு என்றால் என்ன எனத் தொடர்பாடல் பின்னணியிலிருந்து குறிமுறையாவிழ்பு, மற்றும் பொருட் கோடல் செய்ய தேடியபோது: ஒரு செய்தி அனுப்புநரை-ஒரு செய்தியைப்-பெறுநர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில், அதே வேளையில் அந்த செய்தியை-அந்த அனுப்புநரைப் பெறுநர்கள் தள்ளவும் முடியாத நிலையில், பெறுநராகிய ஆள்களிடையே நிகழும் மன நிலை மாற்றத்தின் தாக்கத்தால் ஏற்படும் பின்னூட்டத் தொடர்பாடல் வடிவமே முணுமுணுப்பு எனலாம். இப்படிப்பட்ட இக்கட்டான சூழமைவில் சில மனிதர்கள் செய்வதுதான் முணுமுணுப்பு. இந்த பெறுநர்களுக்கு உண்மையை உரத்துப் பேசவும் முடியவில்லை. உண்மையின் பக்கம், பக்கம் சாராது நிற்கவும் முடியவில்லை. தாங்கள் உண்மையின் பக்கம் இல்லை என்பது இவர்களுக்குத் நன்கு தெரிந்திருக்கும். அதேவேளையில், உண்மையைத் துல்லியமாக ஏற்றுக்கொள்கிற தெளிவும்-நேர்மையும், மனத்துணிவும் இந்த பெறுநர்களுக்கு இல்லை. உண்மையை அறிந்து நம்பகத் தன்மையை ஏற்படுத்துகின்ற விசுவாசமும் இல்லை. எனவே, ஒரே வழி மனம் புழுங்கி முணுமுணுப்பதுதான். இது ஒரு வகையான உளவியல் நோய்தான்.

நாம் இங்கு இன்றைய பைபிள்பகுதியை நோக்கும் போது "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே" என்று இயேசு கூறியதால் யூதர்கள் அவருக்கு எதிராக முணு முணுத்தார்கள். இயேசு கூறிய இறைவார்த்தையைப் பெற்ற பெறுநராகிய யூதர்கள் உண்மையை உரத்துப் பேசவும் முடியவில்லை. உண்மையின் பக்கம் பக்கம் சாராது நிற்கவும் முடியவில்லை. தாங்கள் உண்மையின் பக்கம் இல்லை என்பது இந்த யூதர்களுக்குத் நன்கு தெரிந்திருக்கிறது. அதே வேளையில், உண்மையை ஏற்றுக்கொள்கிற நேர்மையும், மனத்துணிவும் இல்லை. எனவே, ஒரே வழி மனம் புழுங்கி இயேசுவிற்கு எதிராக முணுமுணுப்பதுதான். இந்த உளவியல் நோய்தான் அன்று யூதர்களை ஆட்டிப்படைத்தது எனலாம். யூதர்களுக்கு இயேசுவுடன் வாதிட்டு வெல்லவும் முடியவில்லை. அவர் சொல்லும் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. எனவே, முணுமுணுத்தனர்.

நாம் நம்முடைய வாழ்விலும் அநேக சந்தர்ப்பச் சூழ்நிலையில்: நம் விடுதிகளில், வீடுகளில், வீதிகளில், பள்ளிகளில், பங்குமனைகளில், பணித்தளங்களில், பயண நேரங்களில் உண்மையை உரத்துப் பேசவும் முடியாமல், அநீதியைத் துணிவுடன் தட்டிக் கேட்கவும் முடியாமல் மென்றுமென்று செய்வதெல்லாம் மெல்ல மெல்ல முணுமுணுப்பதுதான். இயேசு நம்மிடம் இன்று சொல்கிறார் முணுமுணுக்க வேண்டாம். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். வாழ்வு தரும் உணவு நானே. ஆம் இயேசு வாழ்வு கொடுக்கும் உயிருள்ள உணவு. எல்லா ஆசியையும் அருளையும் அள்ளித் அளிக்கும் அற்புத உணவு. நோயைக் குணப்படுத்தும் தெய்வீக மருந்து. சாத்தானை ஓட ஓட விரட்டும் சாட்டை, கொல்லும் நஞ்சு கூட இயேசுவை நம்புவோருக்கு தீங்கிழைக்காது. உண்மையை உரக்கப் பேசவும் நல்லதைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ளவும் அருள் வேண்டுவோம்.

ம.பிரான்சிஸ்க் - கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

# தமிழ் பொது வேட்பாளர் தேவை இல்லாத ஒன்று

## சாணக்கியன் எம்.பி

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கான தமிழ் பொது வேட்பாளரை முன்வைக்க வேண்டிய தேவை இல்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளித்துள்ள தமிழ் கட்சிகள் தங்களது கட்சியின் சின்னங்களை அவருக்கு வழங்க மறுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் குழி தோண்டி புதைக்கும் விடயமாக மாறி விடும் இந்த பொது வேட்பாளர் விடயம் எப்பொழுதும் தமிழ் மக்களின் பூரண ஆதரவு கிடைக்காது.

இது ஒரு தேவையில்லாதது என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

தங்களுடைய தனிப்பட்ட இலாபங்களுக்காக இந்த விடயத்தை முன்னெடுத்து வருகிறார்கள் என தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்பது தமிழ் தேசிய கூட்டமைப்பாக கூடித்தான் ஒன்றாக முடிவெடுக்க வேண்டும் இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சிறப்பான எதிர்காலத்தை அமைக்க கூடிய ஒருவருக்கு நாங்கள் நிச்சயமாக ஆதரவு வழங்க வேண்டும் எதிர்வரும் காலங்களில் ஒரு தீர்மானத்தை எடுப்போம் என தெரிவித்தார். (நி)

# கடந்த 8 நாட்களில் 53,000 சுற்றுலா பயணிகள்

(கொழும்பு)

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இந்த மாதத்தில் அதிகரித்துள்ளது.

அதன்படி, ஓகஸ்ட் மாதத்தில் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை எட்டு நாட்களில் 53,150 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில் நாட்டிற்கு இதுவரை 1,252, 209 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் 35,000 பேரும், மே மாதத்தில் 26,000 பேரும், ஜூன் மாதத்தில் 27,000 பேரும், ஜூலை மாதத்தில் 43,000 பேரும் வாராந்திரம் வருகை தந்துள்ள போக்கு வளர்ச்சியடைந்துள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் வாராந்திர சராசரி வருகை சராசரியாக 46,000 ஆகவும் நாளாந்த வருகை சராசரியாக 6,600 ஆகவும் உள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் கோடை காலம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் சுற்றுலா மற்றும் வருகை தரு விசா வழங்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக, எதிர்வரும் வாரங்கள் மற்றும் மாதங்களுக்கு இந்த வேகத்தைத் தக்கவைக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 300 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 450 | 300-400 | 350 |
| தக்காளி | 250 | 300 | 280 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 120-150 | 180 |
| கோவா | 300 | 300 | 400 | 300 | 400 |
| கரட் | 300 | 320 | 280 | 300 | 300 |
| பூசணி | 180 | 160 | 160 | 150 | 160 |
| புடோல் | 100 | 150 | 150 | 140 | 240 |
| வாழைக்காய் | 200 | 260 | 280 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 400 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 180 | 250 | 220 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 150 | 120 | 160 | 200-250 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200 | 300 | 320 |
| லீக்ஸ் | 350 | 400 | 280 | 350 | 350 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 300 | 240 |
| கறிமிளகாய் | 600 | 900 | 700 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 150 | 40-60 | 120 |
| போஞ்சி | 600 | 700 | 600 | 350 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 250 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 800 | 40 | 50 | 100 |
| தேசிக்காய் | 600 | 70 | 600 | 400-500 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 70 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 200 | 800 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 300 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 80 | 80 |

## மீன்கள், ஆமைகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

365 உயிருள்ள மீன்கள், ஆமைகளுடன் விமான நிலையத்தில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுங்க உயிர் பல்வகைமை பாதுகாப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் தலவத்துகொடை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய வர்த்தகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து வந்த குறித்த நபர் தனது நண்பர் ஒருவருக்காக மீன் மற்றும் ஆமைகள் கொண்டு வந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இலங்கை சுங்க பல்லுயிர் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிளை மோதிய பாரவூர்தி

## பெண் பரிதாப மரணம்

(கொழும்பு)

வெலிப்பன்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மத்துகமவில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த கொள்கலன் பாரவூர்தி அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் பெண் ஒருவரும் 6 வயது சிறுமியும் காயமடைந்து நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தர்காநகரில் வசிக்கும் 34 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கொள்கலன் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் வெலிப்பன்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# யாரை ஆதரிப்பது? ரிஷாட்

## கலந்துரையாடல்



(வவுனியா)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் பொது மக்களுடன் கலந்துரையாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாட் பதியூதீன் தெரிவித்தார்.

மக்களின் கருத்துக்களை அறியும் வகையில் இந்த கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினர்.

தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் நேற்று வவுனியா, மன்னார், புத்தளம் பகுதிகளில் மக்களுடனான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சஜித்திற்கு பெருகும் ஆதரவு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஸ்ரீலங்கா குடியரசு முன்னணி ஆகியன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கவுள்ளன.

இது தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன், அடுத்த வாரம் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் உள்ளிட்டவர்களும் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் வாதிகள் தங்களது ஆதரவை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 322 இந்திய மீனவர்கள் இதுவரை கைது



(சென்னை)

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 322 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவர்களின் 44 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதை நிறுத்துமாறும், கைதான மீனவர்களை விடுவிக்குமாறும் கோரி தமிழகத்தின் பல பகுதிகளில் கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

அத்துடன் இந்திய மத்திய அரசு, இதற்கான உரிய தீர்வை எட்ட வேண்டும் என தமிழக அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (நி)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1700 ரூபா

## இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1700 ரூபா சம்பளம் வழங்க 7 தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டி மாவட்ட தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் மற்றும் இளைஞர் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தொழிலாளர் அமைச்சு தனக்குக் கீழ் உள்ளதால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான விசேட சட்டங்களை முன்வைப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாளை திங்கட்கிழமை சம்பளச் சபையைக் கூட்டவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# திருக்கோணேஸ்வர ஆலயத்தில் மாயமான அம்மனின் தாலி

## அதிர்ச்சியில் பக்தர்கள்



(திருமலை)

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை திருகோணேஸ்வரர் ஆலயத்தில் பல கோடி ரூபாய் பெறுமதியான தாலி கொள்ளையிடப்பட்டுள்ளது.

சோழர் காலம் முதல் திருகோணேஸ்வர ஆலயத்தில் இருந்து வந்த குறித்த தாலி, போர்த்துக்கேயர் காலத்தில் ஆலயம் உடைக்கப்பட்ட போது சைவ சமயத்தினாரால் பல உயிர் தியாகங்கள் செய்யப்பட்டு காப்பாற்றப்பட்டு பாதுகாப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பாதுகாக்கப்பட்டு வந்த தாலி, கடந்த வாரம் பகலில் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பொது மக்கள் குரலெழுப்பத் தொடங்கினர்.

பல நூறு கோடி பெறுமதியான இரத்தினங்கள், வைடூரியங்கள் பொதிக்கப்பட்ட 5 சவரன் தாலி பல பூஜைகள் செய்யப்பட்டு சக்தி வாய்ந்ததாக இருந்தது எனவும் இதை எவராலும் ஈடு செய்ய முடியாது எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருடுபோனது, சிவனின் சக்தியை செயலிழக்கச் செய்யப்பட்ட சதியா ? இல்லையெனின் பல கோடி ரூபாய் மதிப்புள்ள தாலியை விற்பனை செய்வதற்காகவா?" என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது குறித்து பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர் இதுவரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவில்லை என கூறப்படுகிறது.

மேலும் இந்த விடயம் குறித்து பொதுமக்கள் ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட தாலியை உடனடியாக மீட்டெடுக்க வேண்டும் எனவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# திருகோணமலையில் கரையொதுங்கும் நண்டுகள்



(திருமலை)

திருகோணமலை நகரில் உள்ள கடற்கரையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை முதல் இலட்சக்கணக்கான சிறு சிகப்பு நிறத்திலான நண்டுகள் இறந்த நிலையில் கரையொதுங்கி உள்ளன.

சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இப்பிரதேசத்துக்கு கூடுதலான சுற்றுலா பயணிகள் வருகின்ற நிலையில் இவ்வாறான நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் ஐந்து தொடக்கம் ஆறு கிலோமீற்றர் நீளமுள்ள இந்தக் கடற்கரையில் மூன்று தொடக்கம் 4 கிலோமீற்றர் தூரம் வரை இவ்வாறான சிவப்பு நிற நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொருபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## தமிழ்ப் பொது வேட்பாளரின் வாக்குகள் குறைந்தால்...

கிணறு பாய்கின்ற போட்டியில் பங்குபற்றினால், கிணற்றை முழுமையாகப் பாய வேண்டும். இதைவிடுத்து அரைக்கிணறு பாய்ந்தேன். முக்கால் கிணறு பாய்ந்தேன் என்று கூறுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

ஆம், அரைக்கிணறு பாய்ந்தாலென்ன, முக்கால் கிணறு பாய்ந்தாலென்ன பாய்ந்தவர் கிணற்றுக்குள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனால்தான் கிணறு பாய்கின்ற போட்டிக்குச் சென்றால், முழுக் கிணற்றைப் பாய வேண்டும் என்றோம்.

உண்மை. இப்போது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேந்திரன் நிறுத்தப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட அளவில் பெயர்களைத் தேர்ந்தெடுத்தபோதிலும் அதில் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு விரும்பாதவர்களும் இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இஃது ஒருபுறமிருக்க, பொது வேட்பாளராக அரியநேந்திரனை பொதுக்கட்டமைப்புத் தெரிவு செய்துள்ளது.

இங்கு தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடுகின்ற அரியநேந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாதென்பது தெரிந்த விடயம்.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவும் அவர் போட்டியிடவில்லை என்பதும் தெரிந்ததே.

இங்கு தமிழ் மக்களின் ஒற்றுமையைக் காட்டுவதே தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதன் நோக்கம் என்ற கருத்து முன்னிறுத்தப்படுகிறது.

நல்லது. ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒற்றுமைப்பட்டு தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பார்களாயின், அது ஒரு காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனலாம்.

மாறாக, தமிழ்ப் பொது வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் சொற்ப வாக்குகளையே பெற்றுள்ளார் எனும்போதுதான், பொது வேட்பாளர் என்ற திட்டம் தவிடுபொடியாகும் என்பதுடன் அதன் பின்விளைவாக தமிழ் மக்களிடையே பல்வேறு கருத்து முரண்பாடுகள் எழுகை பெற்று தலைவிரித்தாடும்.

சில வேளைகளில் தமிழ்ப் பொது வேட்பாளரின் வாக்குகள் மிகவும் சொற்பமானதாக இருக்கும்போது, தமிழர் தாயகத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்காத மாவட்டம் - மாகாணம் என்ற பட்டியல் விமர்சனப் பார்வையில் வெளிவரும்.

அந் நிலைமையானது தமிழ் மக்களைப் பிரதேசவாத நிலையில் பிரித்தாளும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதில் கவனம் செலுத்தத் தவறியமை ஏற்பாட்டாளர்கள் விட்ட மிகப் பெருந்தவறு.

எதுவாயினும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதில் காட்டப்பட்ட ஆர்வம் பொது வேட்பாளருக்கு வாக்குச் சேகரிப்பதில் பன்மடங்கு எழுகை பெற வேண்டும்.

இல்லாவிட்டால் நிலைமை படுமோசமாகும் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

# மீண்டும் மக்களாணை கோருவதற்கு ராஜபக்ஷக்களுக்கு தார்மீக உரிமை இல்லை

## சம்பிக்க காட்டம்

(கொழும்பு)

மீண்டும் மக்களாணை கோருவதற்கு ராஜபக்ஷக்களுக்கு தார்மீக உரிமை கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார். நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பிரவேசம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்ஷக்கள் பொறுப்புக்கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. ஆகவே மீண்டும் மக்களாணை கோருவதற்கு ராஜபக்ஷக்களுக்கு தார்மீக உரிமை கிடையாது.

இளம் பாராளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ் பத்திரன, கஞ்சன விஜேசேகர, செஹான் சேமசிங்க, பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோர் உட்பட மிகச் சிறந்த இளம் அரசியல் தலைவர்கள் ராஜபக்ஷக்களிடம் இருந்து விலகியுள்ளமையை ஆத்மார்த்தமாக வரவேற்கின்றேன்.

2022ஆம் ஆண்டு எரிபொருள் தட்டுப்பாட்டுப் பிரச்சினையின் போது ராஜபக்ஷக்களின் குடும்ப உறுப்பினர் ஒருவர் என்னைச் சந்தித்து எரிபொருள் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குமாறு கோரினார்.

அப்போது வலையில் சிக்கிய புலியை பரிதாபப்பட்டுக் காப்பாற்றிய குரங்கை, அடித்து கொன்று இரையாக்கிய புலியின் கதையை குறிப்பிட்டேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இன்று இதே கதிதான் நேர்ந்துள்ளது.

தன்னைப் பாதுகாத்த ஜனாதிபதி மீதே ராஜபக்ஷக்கள் பாய்ந்துள்ளார்கள்.

தமது தேவை நிறைவடைந்தவுடன் எவராக இருந்தாலும் ராஜபக்ஷக்கள் அவர்களைத் தூக்கி எறிவார்கள்.

2014ஆம் ஆண்டு நான் அதை ஒரு படிப்பினையாகக் கற்றுக்கொண்டேன். பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா பல பில்லியன் ரூபாயைச் செலவு செய்து இந்த படிப்பினையை 2024 ஆம் ஆண்டு கற்றுக் கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார். (நி)

## நினைவிடைத்தோய்தல் கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கவிஞர் அ.சிவபாலசுந்தரன் (ஆரணி) அவர்களின் நினைவிடைத் தோய்தல் கவிதை நூல் வெளியீடானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் குமாரசாமி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் அமைந்துள்ள அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வேல்நம்பி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் தகைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழ்த் தாய்வாழ்த்தினை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உப செயலாளர் கு.பாலஷண்முகன் அவர்களும் வரவேற்புரையினை தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் லோ.துஷிகரனும் நிகழ்த்துவர்.

இந்நூலின் வெளியீட்டுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் ச.லலீசன் அவர்களும் நயப்புரையை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ.த. ஜெயசீலன் அவர்களும் வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து "நினைவிடைதோய்வோம்" எனும் தலைப்பில் பேராசிரியர் கவிஞர் ச.முகுந்தன் தலைமையில் கவிஞர் த. ஜங்கரன், கவிஞர் இ.சர்வேஸ்வரா, கவிஞர் வ.வடிவழகையன், கவிஞர் கு.வீரா ஆகியோர் பங்கேற்கும் சிறப்பு கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஏற்புரையை நூலாசிரியர் அ.சிவபாலசுந்தரன் அவர்கள் ஆற்றுவார். (ம-7)

## தமிழ் பொதுவேட்பாளர் மலையக மக்களை கண்டுகொள்ளவில்லை

### வேட்பாளராக களமிறங்கும் திலகராஜ்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் களமிறங்குகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள் ளது.

தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் அறிவிக்கப்பட்ட போதிலும், அவர்கள் மலையக மக்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை என நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் தெரிவிக்கின்றார்.

மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையிலேயே தான் இந்த தேர்தலில் போட்டியிட எண்ணியதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 76.84 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.66 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.14 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (நி)

## 24.5 மில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு வழங்கும் அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 24.5 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால கூட்டு முதலீட்டை மேலும் முன்னேற்றும் வகையில் இந்த நிதி வழங்கப்படுவதாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

விவசாயம், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், நீர் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு 2 பில்லியன் டொலர்கள் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

1956 ஆம் ஆண்டு முதல் இந்த உதவி வழங்கப்பட்டு வருவதாக தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)

## ஜனாதிபதி ரணிலுக்கு மேலுமொரு கட்சி ஆதரவு

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளது.

இதனை அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அசங்க நவரத்ன தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞன் கடத்தல் விவகாரம்;

## ♦ 7 இளைஞர்கள் கைது
## ♦ 3 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் இளைஞன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று மோட்டர் சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த வியாழக்கிழமை அதிகாலை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவரை காணவில்லை என வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி வழிகாட்டலில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் தெரியவந்துள்ளது.

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை மாலை பூந்தோட்டம் பகுதியில் உள்ள தனது வீட்டில் தனது பிறந்தநாள் நிகழ்வினை வெகுவிமர்சையாக கொண்டாடியுள்ளார்.

மதுபோதையில் இருந்த இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனை அங்கு இருந்த உறவினர்கள் சமரசம் செய்து வைத்துள்ளனர்.

அதன் பின்னர் வியாழக்கிழமை அதிகாலை 1 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று பிறந்தநாள் இளைஞனை கடத்தி சென்று குட்செட் வீதியில் உள்ள கருமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள பாழடைந்த வீட்டில் இளைஞனை அடைத்து வைத்து கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளதாகத் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாழடைந்த வீட்டில் இளைஞனை அடைத்து வைத்து விட்டு கடத்தியவர்கள் தப்பி சென்ற நிலையில், கடத்தப்பட்ட இளைஞனை மீட்டு அவரை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பொலிஸார் அனுமதித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் 20 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த 3 பேரும், வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 2 பேரும் கோயில் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் தோணிக்கல் பகுதியை சேர்ந்த ஒருவரும் உள்ளடங்கியுள்ளனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மூன்று மோட்டர் சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களையும் கைது செய்யப்பட்ட இளைஞர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-250)

# மன்னார் மடுத் திருத்தல ஆவணி மாத திருவிழா


## முன்னாயத்த நடவடிக்கைகள் தீவிரம்

(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மடு திருத்தலத்தில் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெற உள்ளது.

இந்த நிலையில், மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் மடு திருத்தல மண்டபத்தில் இடம் பெற்றது. (நி)



கிளிநொச்சி மத்திய கல்லூரி 2026 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அண்மையில் சுற்றாடலை அழகுபடுத்தும் சிரமதானப் பணியை முன்னெடுத்து இருந்தனர். (படம்: கிருஷ்ணகுமார்)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்றவளாகத்தில் 78 கியூப் மணல் மற்றும் 107 கிலோ மஞ்சள் ஏல விற்பனை 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு ஏலவிற்பனைக்கான மணலினையும் மஞ்சளினையும் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலயம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி)

# பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 251 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்இராணுவத்தினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி பாதுகாப்பு படைப்பிரிவின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேசத்தில் 2024 ஆம் ஆண்டில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 251 மாணவர்களுக்கான குறித்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. குறித்த நிகழ்வானது கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மற்றும் 55ஆவது படைப் பிரிவினுடைய கட்டளை அதிகாரி மற்றும் இராணுவ பதவி நிலை உத்தியோகத்தர்கள், பூநகரி பிரதேச வைத்தியசாலையினுடைய பொறுப்பு வைத்திய அதிகாரி பாட சாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (நி-315)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:34<br>7இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: Diploma in Civil Engineering, TO<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B /14715 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா-42 1/2<br>8 இல் சூரிசெவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: IT,Diploma in English, Fashion Designing.<br>எதிர்பார்ப்பு:அரச /தனியார் உத்தியோகம், சைவபோசனம்<br>தொ.இ: G/14726 |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:10<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:QS(ஓமான்)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்.<br>தொ.இ: B/14717 | பிறப்பு:1999 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்:BBA(Final Year)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14729 |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 30<br>உயரம் :5'3<br>தகைமை/தொழில்: O/L, Bus Dirver<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14719 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>12 இல் செவ<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.A(Hons), Teacher<br>எதிர்பார்ப்பு:குணமான மணமகன்<br>தொ.இ: G/14730 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- செவ்வாய்க்கிழமை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தல் தொடர்...

வித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் 186 முறைப்பாடுகளும் மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் 80 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதில், தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 266 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## விசேட வர்த்த...

ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

அதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத சின்னங்கள் அடங்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியாகியுள்ளது. (ம-7)

## காங்கேசன்...

யோகபூர்வமாக சேவையில் ஈடுபடவுள்ளது.

அந்தவகையில், இந்தியா நாகப்பட்டினத்தில் இருந்து சிவகங்கை பயணிகள் கப்பலானது வெள்ளோட்டத்திற்காக நேற்று 12 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வருகை தந்தது.

கடந்த வருடம் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் மற்றும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை பலமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 15ஆம் திகதி கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-7)

## நல்லூர்...

நேற்று நடைபெற்றுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலயத்தைச் சூழவுள்ள வீதிகள் தற்காலிமாக மூடப்பட்டு மாற்றுப் பாதைகள் ஊடாக போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், வாகனப் போக்குவரத்துக்களை தடை செய்யும் வீதித்தடைகளையும் மீறி நல்லூர்க் கந்தசாமி ஆலய முன்பக்கம் வரை பௌத்த பிக்குகளின் வாகனங்கள் அத்துமீறி உள்நுழைந்ததாக முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தனது முகநூலில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் அனுமதியுடன் இவ்வாகனங்கள் உள்நுழைந்ததாக சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7,33)

## அரியநேந்திரன்...

தொடர்பில் இதுவரை எவ்வித முடிவுகளையும் மேற்கொள்ள முன்னர் அக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினரான அரியநேந்திரன் பொது வேட்பாளராக 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை கட்சியின் மத்திய குழு கூடி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ளவுள்ளது. அதன் பின்னரே கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அறிவிக்கப்படும் என்றார். (ம-7)

## தமிழ் மக்களின்...

பதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்களின் கருத்தை வெளிப்படுத்துவதே இந்த ஜனாதிபதித் தேர்தலின் நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முழுவதுமாக தமிழ் மக்களுக்காக ஒரு வேட்பாளரை முன்வைத்து இத்தனை நாட்களாக தமிழ் மக்களுக்கு காணப்படக்கூடிய பிரச்சினைகளை அந்த வேட்பாளர் மூலம் புரிய வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

சர்வதேசமும் அவை தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும். எங்களுக்கான உரிமைகளை நாங்கள் முன்வைக்கத் தீர்மானித்துள்ளோம் என சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துக் காட்டியுள்ளார்.

வெற்றி பெற முடியாவிட்டாலும் தமிழ் மக்களின் பலத்தைக் காட்ட இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழ்ப் பாராளு...

பதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை நேற்று சனிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது வடக்கு, கிழக்கில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் மாவட்டங்களின் அபிவிருத்தி குறித்து இருவரும் கலந்துரையாடியதாகப் பொதுஜன பெரமுனவின் மத்திய குழுவில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அப்பகுதி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் இளைஞர்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் சிறந்த எதிர்காலத்தை வழங்குவதற்கும் தாம் தயார் என சுமந்திரனிடம் நாமல் ராஜபக்ஷ தெரிவித்ததாக காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை பொருட்படுத்தாது வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள குடிமக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதை உறுதி செய்ய விரும்புவதாகவும், இந்த மாவட்டங்களை சர்வதேச வர்த்தக மையங்களாக மேம்படுத்தவும் விரும்புவதாக நாமல் ராஜபக்ஷ கூறினார்.

மேலும் அனைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் சந்தித்து குறைகளை விரிவாக கலந்துரையாடுமாறும் கேட்டுக் கொண்டார். (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## தேர்...

மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பக்கச்சார்பானவையாகவோ அல்லது குறித்தவொரு தரப்பினருக்கு சாதகமானவையாகவோ அமையக்கூடாது. அதே போன்று அரசியல் காரணங்களால் அல்லது வேறு அழுத்தங்களால் இம்முறைப்பாடுகளை விசாரணையின்றிப் புறந்தள்ளுவது அரசியலமைப்பின் 12ஆவது சரத்தை மீறும் செயலாகும்.

அதேவேளை வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் தொடர்பில் சட்டத்துக்கு அமைவாகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். தேர்தல் பிரசார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சட்டங்களை எவ்வித பக்கச்சார்புமின்றி சகல வேட்பாளர்களுக்கும் ஒரேவிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தோடு தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கும்போது உரிய சகல சட்டங்கள் மற்றும் நடைமுறைகளும் பின்பற்றப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 5561
D 7 7 0 3 5 2
அத சம்பத D 0 3 5 2
சீட்டிழுப்பு இலக்கம் 136

தன நிதானய
திகதி 2024.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 1591
T 06 54 73 77 T
57030

மெகா பவர்
திகதி 10/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1909
L 10 09 14 66 67
11569

லக்கி 7 VIP
திகதி 2024.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 0387
D 9 8 7 8 7 5 D

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3803
சீட்டிழுப்பு திகதி 10.08.2024
I 04 21 61 72
I 03338

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 0870
மீனம் 15 47 56 62 மீனம்
89811 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.08.2024 வெற்றி வாரம் 269 வர்ணம் நீலம்
A 0 1 3 5 9 5
49338
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,354,804.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2535 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 10.08.2024 தினம் சனிக்கிழமை
17 40 62 76 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,184,728.00

சனிதா
திகதி 2024.08.10 வெற்றி வாரம் 4696
01 20 52 54 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,051,872.40
31853

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4247 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.10 தினம் சனிக்கிழமை
02 14 45 59 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,316,814.80
184976

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 24 03 20 45 48
1711 சிவப்பு 10.08.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 538,257,071.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் 2361
சீட்டிழுப்பு திகதி 2024.08.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,683,521.60
08 28 40 56 Q
833027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

மீசாலை வடக்கில் A9 வீதியில் இருந்து 1/2 Km தூரத்தில் புத்தூர் - மீசாலை வீதியில் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**0770 780 240**

(1683)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322 / 077 77 19 322 Visit Visas Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0963)

## வேலையாள் தேவை

- சமையலாளர் — தோசை, ரொட்டி, இடியப்பம், புட்டு, அப்பம் செய்யக் கூடியவர்கள்
- சமையல் உதவியாளர் (பகுதி நேரம்/ முழுநேரம்)
- உணவு பரிமாறுபவர் (20 - 35) வயது ஆண்/ பெண்

**077 652 9583**

(1659)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் கோப்பாய் பிரதேசசெயலகம் அருகில் 3 1/4 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

**077 570 8634**

0049 15784 7366 36 (Whatsapp)

(1661)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இந்து. 1990 இல் பிறந்த உத்தர நட்சத்திரம் 3ம் பாதம் HNDE (civil) பட்டதாரி அரச தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**075 074 0708**
**077 062 3112**

(1665)

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**

போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



**CIMS College**
49A, Chapel Street, Jaffna.

(C-0963)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services



உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 / 0768226241

(C-0963)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு சைவபோசனம் சாப்பிடுபவர்களுக்கு மட்டும் வாடகைக்குண்டு.

**021 222 2711**
**070 490 9483**

(1673)

## கொழும்பில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு

டிஷ் ஆண்டெனா இணைப்பு மற்றும் கேபிள் டிவி இணைப்பு A/L அல்லது O/L படித்த இளைஞர்கள் மேற்படி பயிற்சியுடன் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும். சாரதி அனுமதி சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03 மாத பயிற்சிக் காலத்தில் Rs.40,000/- (உணவு தங்குமிடம் இலவசம்.) பயிற்சியில் திறமையுடன் செயற்பட்டவர்களுக்கு உணவு தங்குமிடத்துடன் Rs.60,000/= + இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்.

**0777 710 785 (KUMAR)**
**SATS-TECH ENGINEERS LANKA (PVT)LTD**

(1339)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(1489)

## A/L PHYSICS CLASS

**24, 25, 26 Batch**

மாணவர்களுக்கு தனிப்பட்ட, குழு வகுப்புக்கள் நடைபெறுகின்றன

159/1, Vembady Road, Jaffna.
Y.M.C.A Thampasiddy, Pointpedro

**Ranjit Sir** B.Sc, P.G.D.E, S.L.P.S.I

**077 600 4896**

(1660)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர் (பகுதி/ முழுநேர) தேவை. தங்குமிட வசதிகள் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**077 424 4063**

(1680)

## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.

- மதிய உணவு வழங்கப்படும்.
- சம்பளம் :- நாள் ஒன்றிற்கு 4,500/=
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு :

**077 937 0000, 075 988 1000**

(1676)

## தென்னம் தோட்டக் காணி விற்பனைக்கு

அமைவிடம் : A9 வீதியின் கிழக்குப் பகுதி வீதியிலிருந்து 1 Km உட்பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மல்வில் - கிருஷ்ணர் கோவிலுக்கு முன் உள்ள காணி. காய்க்கும் நிலையில் 70 முதிர்ந்த தென்னைகளும், 330 இளம் தென்னைகளும் உண்டு. நேரிலும் பார்வையிடலாம்.

**075 296 7469**

(1649)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:

**075 033 6759**

(216)

## கோழி முட்டை மலிவு விலையில்

1 Kg இறைச்சி 1000/=
முட்டை 35/=

நியூசிற்றி கோழிக்கடை
கோழி பாம் குருநகர் மாக்கற் முன்பாக யாழ்ப்பாணம்.

(1658)

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), "கிளிப்" போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**
**பற் சிகிச்சைப் பிரிவில்**

(யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக, Singer Company அருகில்) நடைபெறுகிறது.

578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 375 4490**
**077 220 2769**

(C-961)

## கார் விற்பனைக்கு

Audi Q2 (2018)ம் ஆண்டு கார் விற்பனைக்குள்ளது.

தொடர்புகளுக்கு:

**076 693 2227**

(1668)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 235/= | Max 5Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 199/= | |
| 1 Kg பொன்னி அரிசி | - 278/= | |
| 1Kg சம்பா | - 228/= | |
| 1Kg செத்தல் மிளகாய் | - 760/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3450/= | ~~3900/=~~ |

400g Anchor 1010/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைகளுக்கு விபரங்களுக்கு எமது Facebook: happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(238)

Happy Supermarket **0777 8080 30**

## சண்முகா & சன்ஸ்

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 240/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 165/= |
| 1 Kg றவை | - 285/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 275/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= |
| 1 Kg பெரிய வெங்காயம் | - 200/= |
| 1 Kg சின்ன வெங்காயம் | - 300/= |
| 1 Kg உருளைக் கிழங்கு | - 200/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 210/= |
| 1 Kg பொன்னி அரிசி | - 280/= |
| 1Kg சம்பா | - 230/= |
| 1Kg செத்தல் மிளகாய் | - 760/= |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= |
| 1 முட்டை | - 38/= |
| 1 1/2 l தண்ணீர் போத்தல் (Aquafina) | - 90/= |

400g Anchor 1020/=



~~1050/=~~

(1675)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளுங்கள்.

காளி கோவில் வீதி, சாவகச்சேரி. தொடர்பு : 077 612 0012

## முழுநேர/ பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- G.C.E(O/L) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 60 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**Salary - Basic Rs 30,000/= + Commission**

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை(CV) கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**077 348 1282**
**yprasa@gmail.com**

(1651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.